இந்த எச்சரிக்கை முறையில் தண்டனை மிகக் கடினமாக இருக்கும். தண்டனையின் கொடுகை மிக அதிகம் என்ற எச்சரிக்கை மணி அடிப்பதே இதன் நோக்கம். இது குற்றவாளிகளுக்கிடையில் மையத்தில் ஒரு பய உணர்வை உண்டு பண்ணும் இதுவே சிறந்த தண்டனை தத்துவம் என்பதால் பெரும்பாலும் தண்டனை சட்டங்களில் இது ஏற்கபபட்டு செயல்படுத்தப்படுகிறது. சாதாரண குற்றவாளிகளுக்கு இது உகந்ததல்ல வாடிக்கையான குற்றவாளிகள் அப்ப அப்ப குற்றம் புரிந்து விட்டு மீண்டும் சிறைக்கு வருவார்கள். இந்த தண்டனை தத்துவத்தின் நோக்கமே விரையமாகிறது. இங்கிலாந்தில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை கொடுத்த இடத்தில் அதனை வேடிக்கை பார்க்க வந்த பல்லாயிர கணக்கான ஜனங்களிடையே திருட்டும் அடிதடியும் பிக்பாக்கெட்டும் நடந்தது என்பது குறிப்பிடதக்கது.

## முன்கூட்டியே தடுக்கக்கூடிய தண்டனை தத்துவம் :

குற்ற நடவடிக்கையை தடுத்து நிறுத்தி குற்றவாளிகளை திருத்துவது இந்த கோட்பாட்டின் நோக்கம் இந்த நோக்கின்படி குற்றவாளிகள் மீண்டும் மீண்டும் குற்றம் செய்வதை தடுத்து நிறுத்துவதாகும். குற்றவாளிகள் குற்றம் செய்யவிடாமல் அவர்களை பலவீனப்படுத்த வேண்டும். அதற்கு ஜெயில் தண்டனையே ஏற்றது. இந்த கூற்றுபடி மரண தண்டனை விதிக்கப்பட்டவனுக்கு திருந்தும் அல்லது சீர்திருத்தம் அடையக்கூடிய சந்தர்ப்பம் கிட்டுவதில்லை. தடுக்கக்கூடிய கொள்கைக்கு முரணாக தெரிகிறது.

## சீர்படுத்தும் தண்டனை முறை:

இந்த தத்துவத்தின்படி குற்றவாளிகளின் தன்மையில் குணாதிசியங்கள் மாறுதல் ஏற்படச் செய்வது. அவனை குற்ற தன்மையில் இருந்து மாற்றி சட்டத்திற்கு கட்டுபடும் ஒரு மனிதனாக காண்பித்து முரட்டுத்தனமாக கடுமையான தண்டனை முறைகளை இது எதிர்க்கிறது. இவர்களை ஓரிடத்தில் வைத்து தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

இதற்காகத்தான் பரோல் லீவு மற்றும் புரபேஷனில் கண்காணிப்பு முறை வழக்கத்தில் உள்ளது. ஆனால் இதனை எல்லா குற்றவாளிகளுக்கும் இது பொருந்தாது., வேண்டுமானல் குமரப்பருவ குற்றவாளிகளுக்கும் முதல் தவறு செய்த குற்றவாளிகளுக்கும் பெண்களுக்கு எதிரான குற்றம் செய்யும் மனநோயாளிகளுக்கும் இத்தகைய தண்டனை தத்துவம் பொருந்தும்.

## குற்ற தண்டனையின் வகைகள் :

சமுதாயத்தில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பலதரப்பட்ட தண்டனை முறைகள் வழக்கத்தில் இருந்தன. பழைய காலத்தில் மிகவும் கடினமான தண்டனைகள் இருந்தன தற்போது நவீன காலத்தில் சீர்திருத்தம் செய்யபப்பட்ட தண்டனைகள் உள்ளன. சில அமைப்புகள் மரண தண்டனை வேண்டும் என்றே கூறுகிறது

1) Flagging - சாட்டையால் அடிப்பது
2) Pillory - தொழுமரத்தில் ஏற்றுவது
3) Branding - சூடுபோடுவது
4) Mutilation - கை, கால், விரல்களை துண்டிப்பது
5) Forfeiture of property - சொத்துகளை முடக்குவது
6) Fine - அபராத பணம் கட்டுவது
7) Transportation or Banishment - நாடு கடத்துவது
8) Solitary confinement - தனி சிறை அறையில் அடைப்பது
9) Imprisonment - சிறை
10) Death - மரண தண்டனை

## சாட்டையால் அடிப்பது :

இந்தியாவில் 1955 முன்பு சாட்டையால் அடிக்கும் தண்டனை மிக அதிகமாக வழக்கத்தில் இருந்தது. பிறகு இத்தகைய தண்டனை சட்டத்திலிருந்து நீக்கப்பட்டது. இது நாகரீகம் வளர்ந்த காலத்திலேயே கையாளப்பட்ட முறை இந்த முறையில் சிறு குற்றம் செய்பவர்களை திருத்தலாம் என்ற நம்பிக்கை இருந்தது.

## தொழுமரத்தில் ஏற்றுவது:

இந்த தண்டனையில் குற்றவாளிகளின் தலை, கை, கால்களை மடக்கி மரத்தில் வைத்து சட்டத்தில் உள்ளடக்கி பூட்டுவதாகும். இது மிகவும் கொடுமையான தண்டனை, அவன் செய்த குற்றம் மிகப்பெரிய குற்றமாயின் அவ்வாறு தொழுமரத்தில் ஏற்றப்பட்ட பின்பு கற்களால் குற்றவாளிகளை அடிப்பது. சில வழக்குகளில் காதுகளை தொழுமரத்தின் சட்டத்தில் வைத்து ஆணி அடிப்பது உண்டு. இப்படி செய்வதால் எந்தவித அசைவும் குற்றவாளிகளால் செய்ய முடியாது. இது இந்தியாவில் மொகலாயர் காலத்தில் இருந்தது. பிறகு ஒழிக்கப்பட்டது.

## சூடு போடுவது. :

நெருப்பை காய்ச்சி நெற்றியில் சூடு போடும் முறை உலகத்தில் 1827 வரை இருந்தது. பிறகு ஒழிக்கப்பட்டது. அமெரிக்காவிலும் இந்த சூடுபோடும் முறை இருந்தது. இதன்படி ஆங்கில எழுத்து **I**-யை கன்ன கலவு செய்யும் திருடர்களின் நெற்றியில் வைக்கப்படும். வாடிக்கை திருடர்களாக இருந்தால் **R** என்ற ஆங்கில எழுத்தை சூடுபோட்டு வைக்கப்படும். இந்த முறை அமெரிக்காவிலும் தற்போது இல்லை,

## கை, கால் விரல்களை துண்டிப்பது:

இந்தியாவில் இந்துக்கள் ஆண்ட காலத்தில் கை, கால் விரல்களை துண்டிக்கும் முறை இருந்தது. திருட்டு குற்றம் செய்தவனின் கைகள் வெட்டப்படும். கற்பழிப்பு போன்ற குற்றங்களை செய்தவனின் மர்ம உறுப்புகள் துண்டிக்கப்படும். தற்போது இந்த தண்டனை முறை வழக்கத்தில் இல்லை.

## சிறை தண்டனை:

செய்த குற்றத்திற்கு தண்டனையாக சிறையில் வைத்து அவன் திருந்துவதற்காக கொடுக்கும் தண்டனை ஒரு மனிதனுக்கு சிறையில் வைப்பது என்பது அவன் மானம் அழிந்து வாழும் கதை, இதுவே இன்றைய நிலையில் பொதுவாக வழக்கில் உள்ள தண்டனை ஆகும். அவனுடைய தனிப்பட்ட அகந்தை ஒழிகிறது. ஆணவம் அழிகிறது. சிறையில் மற்றவர்களோடு ஒரே சீருடை, உணவு, மருந்து, படுக்கை ஆகியவைகளை பகிர்ந்து அங்கு அனுபவிக்க வேண்டியது. சில சமயங்களில் சிறை உள்ளவர்கள் திருந்துவதில்லை. சிறையிலேயே சில வகையான குற்றங்களை செய்வார்கள் சூது விளையாடுவது ஓரின சேர்க்கை, ஊழல் செய்வது போன்றவை சிறை சென்றவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்படுவர் அவர்கள் சிறையில் இருந்து வெளியில் வரும்போது வேலை கிடைக்காது.

## மரண தண்டனை:

மரண தண்டனையை Capital Punishment என்று கூறுவார்கள். மரண தண்டனை தூக்கு மூலம் நிறைவேற்றப்படும். இந்த தண்டனை குற்றவாளிகளுக்கு வழங்கும் போது அவன் செய்த குற்றத்தின் தன்மை, செயல் இவைகளை கணக்கில் எடுக்கப்படும். இவன் மற்றவன் உயிரை எடுக்கிறான். ஆகவே இவன் உயிரையும் தண்டனை மூலம் எடுக்கப்பட வேண்டும். மொகலாயர் காலத்தில் எருமை மாடு அன்றே அறுத்த தோலினை குற்றவாளிகளின் உடலில் சுற்றி கடும் வெயிலில் போடுவார்கள். வெயில் ஏற ஏற எருமை தோல் சுருங்க சுருங்க குற்றவாளியின் உடல் இறுக்கமடையும் பிறகு மரணம் சம்பவிக்கும். இந்த முறை ஆங்கிலேயர்கள் ஆட்சிக்கு வந்ததும் ஒழிக்கப்பட்டது. இன்று இந்திய பீனல் கோடு (IPC) இந்திய தண்டனை சட்டப்படி தண்டனை, சாதா சிறைக்காவல், கடுமையான சிறைக்காவல் ஆயுள் தண்டனை மற்றும் மரண தண்டனை வழக்கில் உள்ளன.

## சொத்துகள் முடக்குவது:

குற்றவாளிகளின் சொத்துகளை முடக்குவதும் அதனை அரசாங்க கஜானாவுக்கு சொந்தமாக்குவதற்கும் சட்டப்படி கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் குற்றவாளிகளின் சொத்துக்களை அரசாங்க கஜானாவுக்கு சொந்தமாக்க முடியாது. அவன் திருடிய சொத்துக்களை மட்டும் இழந்தவர்களுக்கு திருப்பி தரவேண்டும். கள்ள கடத்தல் செய்பவர்களுக்கும் கள்ள மார்க்கெட்டில்

சம்பாதிப்பவர்களுக்கும் இத்தகைய சொத்துகளை முடக்கி அரசாங்கம் எடுத்துக்கொள்வது நல்ல தொலை நோக்கு பார்வை என்று சொல்லப்படுகிறது.

## தண்டனை பணம் கட்டுவது:

Fine கட்டுவது எப்போதும் பொதுவாக உள்ள ஒரு வகை தண்டனை. இது சாதாரண குற்றங்களான சாலை போக்குவரத்து குற்றங்கள் மற்றும் அரசாங்க வருவாய்க்கு நஷ்டம் ஏற்படுத்துவது போன்ற குற்றங்களுக்கு வழங்கப்படும் தண்டனை. இத்தகைய தண்டனைகள், இன்று எல்லா நாட்டுகளிளும் நடைமுறை வழக்கத்தில் உள்ள தண்டனை முறையாகும்.

## நாடு கடத்துவது:

குற்றவாளிகளை அந்த நாட்டின் சமுதாயத்தில் இருந்து விளக்கி வைக்க நாடு கடத்தல் முறை வழக்கில் இருந்தது. இந்தியாவில் இருந்து கைதிகளை முற்காலத்தில் அந்தமான் தீவிற்கு அனுப்பப்பட்டனர். பிற்காலத்தில் இந்த தண்டனை முறை ஒழிக்கப்பட்டது. உபயோகமற்ற குற்றவாளிகளை சமுதாயத்தில் இருந்து நீக்கிவிட இந்த தண்டனை முறை நல்லதாக லோம்பரோஸா காலத்தில் கருதப்பட்டது.

## தனி சிறை அறையில் அடைப்பது:

தனியாக உள்ள வசதி அற்ற இருட்டறையில் குற்றவாளிகளை ஜெயிலில் வைப்பது. இத்தகைய குற்றவாளிகளுக்கு எந்த வேலையும் கொடுக்கப்படமாட்டாது. ஜெயிலில் போக்கிரிதனம் செய்பவர்களுக்கு தனி செல்லில் அடைக்கப்படுவதே இந்த தண்டனையின் நோக்கம். இப்படி தனியாக நாள் கணக்கில் தனி சிறை அறையில் இருப்பதால் அந்த சூழ்நிலையே அவனை மாற்றி அவனுடைய தீய குணங்களை மறக்க ஏதுவாகிறது. ஆனால் சில சமயங்களில் அவர்களுக்கு பைத்தியமும் பிடிக்கும் அல்லது மிகவும் கொடுர தன்மையும் உண்டாக்கும்.

குற்ற தண்டனைகளுக்கான கோட்பாடுகள் (தொடர்ச்சி மேலும்) அரசியல் சாசனப்படி தண்டனை என்பது குற்றவியல் நீதி மன்றங்களால் தரப்படவேண்டியது.

இந்திய தண்டனை சட்டம் பிரிவு 53-படி கீழ்காணும் தண்டனைகள் குற்ற நடவடிக்கைகளுக்கு உண்டு (நடைமுறையில் தற்போது உள்ளவை)

1) Death - மரண தண்டனை
2) Life imprisonment - ஆயுள் தண்டனை
3) Rigorous imprisonment - கடும் சிறை தண்டனை
4) Simple imprisonment - சாதா சிறை தண்டனை
5) Forfeiture of property - சொத்துகளை பறிமுதல் செய்தல்
6) Fine - அபராதம்

தண்டனையின் உத்தேசம் குற்றவாளிகளுக்கு தண்டனை கொடுத்து சமூகத்தை காப்பாற்றுவது. சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு தரும் தண்டனையும் குற்றவாளி கஷ்டப்பட வைக்கும் தண்டனையும் தனித்தனித் தன்மை வாய்ந்தது. அதன் வித்தியாசங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

Probation சோதனை காலம் நன்னடத்தை காரணமாக புதிய குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் விடுமுறை விடுதலை இதனால் குற்றவாளிகளின எதிர்காலம் பாழாகாமல் இருக்க ஏதுவாகிறது.

கோர்ட்டார் தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்பது விதி. மரண தண்டனை வழங்கிய வழக்கில் சரியான காரணங்கள் இருப்பின் மரண தண்டனை நிறைவேற்றப்படும். உச்ச நீதிமன்றம் ஒரு கொலை வழக்கில் குற்றவாளிகளுக்கு அளித்த மரண தண்டனையை உறுதி செய்தது. இந்த கொலை வழக்கில் குற்றவாளி 14 வயது 20 வயது உள்ள இரு பெண்களை கொடுரமாக கொலை செய்தவன்.

இந்திய சட்டத்தில் உள்ள தண்டனை முறைகள் குற்ற தன்மையை பற்றியது ஒழுகிய குற்றத்தை செய்தவர் தன்மையை பற்றியது இல்லை. தண்டனை முறையில் சீரான ஒரு தன்மை கோர்ட்டில் பார்ப்பது இல்லை. ஒவ்வொரு கோர்ட்டுக்கும் ஒவ்வொரு தீர்ப்பு. இந்திய சட்டத்தில் எந்தெந்த குற்றத்திற்கு எந்தெந்த தண்டனை என்பது கீழ்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது.

**மரண தண்டனை** : இத்தண்டனை மிகவும் அரிதாகக் கொடுக்கப்படுகிறது. கொலை மற்றும் அரசாங்க குற்றம் மற்றும் கூட்டு கொள்ளை போன்ற குற்றங்களுக்கு தரப்படுகிறது.

**ஆயுள் தண்டனை** : ஏற்கனவே அந்தமான கைது என்று சொல்லப்பட்டது. ஆயுள் தண்டனை பெற்றவர்கள் அனுபவிப்பது கடும் சிறை தண்டனை ஆகும். குறைந்த பட்சம் 14 ஆண்டு சிறைவாசம் செய்ய வேண்டும்.

**கடும் சிறை தண்டனை** : கடும் சிறை தண்டனை அடைந்தவர்கள் சிறையில் கடுமையான வேலைகள் செய்ய வேண்டும். இதில் சில வேலைகள் மாவு அரைத்தல், மண்வெட்டுதல், தண்ணீர் இறைத்தல், விறகு வெட்டுதல், உரோமங்களை சரிசெய்தல் போன்றவை

**சாதாரண சிறை தண்டனை** : சாதரண சிறிய குற்றங்களுக்கு கடும் வேலையில்லாமல் சிறையில் வாடுவது.

**சொத்துக்களை பறிமுதல் செய்வது** : இது தற்போது அதிக அளவில் இல்லாவிட்டாலும் இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 126, 127,169 படி சொத்துக்களை பறிமுதல் செய்வது இருந்துவருகிறது.

126 - இந்தியாவுடன் நல்லுறவு உள்ள நாடுகளில் குற்றம் புரிதல்.

127 - சண்டை காலங்களில் பொருள்களை பெறுதல்.

169 - அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சட்டவிரோமாக சொத்துக்களை வாங்குதல்

அபராதம் :

அபராதங்கள் பொது இடங்களில் தொந்தரவு செய்தல் சிறு குற்றங்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது.

எல்லா குற்றவாளிகளுக்கும் தண்டனை வழங்கும்போது – குற்றவாளிகள் தங்களுக்கு எதிராக அவர்களே சாட்சியம் அளிக்க கட்டாய சூழ்நிலையை உண்டாக்கக் கூடாது. மேற்படி சூழ்நிலைகள் கீழ்காணும் காரணங்களால் ஏற்பட ஏதுவாகிறது.

- குற்றவாளியை பட்டினிகிடக்க செய்வது
- குற்றவாளிகளை அடிப்பது
- குற்றவாளிகளை ஏமாறும்படி செய்வது

உதாரணமாக நீ குற்றத்தை ஒத்துக்கொள்ளாவிட்டால், உன் மகனை துன்பத்துக்கு ஆளாக்குவோம் என்று கூறுவது.

எந்த காரணத்தை கொண்டு தூண்டுதல் (Inducement), அச்சுறுத்தல் (Threat), சத்திய பிரமாணம் (Promise) இவைகளை செய்து, குற்றவாளிகளை தம்வசப்படுத்தக் கூடாது. இதை தான் ஆங்கிலத்தில் சுருக்கமாக I.T.P. என்பார்கள்.

| | | | |
|---|---|---|---|
| I | Inducement | - | ஏமாற்று வித்தை |
| T | Threat | - | பயமுறுத்தல் |
| P | Promise | - | இன்னது நான் செய்வேன் என்று சத்தியம் செய்வது |

**REFORMATORY MEASURES:**

Crime and social and policy are inter – related and the concept of crime and punishment depends largely on the social values, accepts norms and behavioral pattern of a particular society of the given time. What is wrongful to one place may not be wrongful to another place. The philosophy under lying these information technique is rehabilitation of offenders or reformatory measures. The modern reformatory measures with excessive information is likely to defeat the object of peralogy (Punishemnt). There are many influence for the crimes – Neighbourhood influence, control of alcoholism, poverty cave on children against sexual offences, the precarious conditions of adolescents – these influences need to the checked by creating public awareness with the support of press / media, NGOs etc. The object of punishment was in earlier days, to prevent offenders from repeating crimes, now the modern trend to reform them,

Thus the reformatory measures need to be done on

1. Reforms on correctional institutions (i.e) Jails
2. Reforms for suppression of criminality

குற்றம் செய்தலும் சமுதாய நோக்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. குற்றம் செய்யும் தத்துவமும் தண்டனை தரும் தத்துவமும் சமுதாய நலனுக்கும் சமுதாயம் ஏற்றுக்கொண்ட பாதைக்கும் சமுதாயம் வகுத்துக்கொண்ட நடவடிக்கைக்கும் அந்தந்த காலகட்டத்துக்கு ஏற்றார்போல் நடப்பதுதான். ஒரு சமுதாயத்திற்கு ஒரு காலகட்டத்தில் ஒருசெயல் குற்றம் என்றால் அதே காலத்தில் வேறு ஒரு சமுதாயத்திற்கு அது குற்றமாகாது உதாரணம் மது விலக்கு சட்டம் ஆகும். ஒரு சட்டத்தின் உள்நோக்கம் குற்றவாளிகளை சீர்படுத்துதல் ஆகும். உதாரணம், மது கொள்கைகளால் சிறுவர்களும், இளைஞர்களும், பெற்றோர்களின் கட்டுபாட்டைமீறி சீரழிந்து குற்ற செயல்களுக்கு ஆளாவது. குமரப்பருவத்தில் குற்றம் புரிவது ஒழுக்கமில்லா நிலையை காட்டுகிறது. இதற்கெல்லாம் எதிர்மறையான விழிப்புணர்வுகள் தேவை. பத்திரிகை செய்தியாளர் மற்றும் சில அமைப்புகள் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தி குற்றவாளிகளை சீர்படுத்தும் பாங்கினை வளர்க்க வேண்டும். முற்காலத்தில் கடும் தண்டனைமூலமே குற்றவாளிகளை தண்டித்து மீண்டும் குற்றம் செய்யாமல் இருக்கும் வழிகளைப் பார்த்தனர். தற்போது நவீன காலத்தில் அவர்களை சீர்படுத்தி மேலுயர்த்த பார்க்கிறார்கள்.

**கீழ்காணும் சீர்படுத்தும் முறைகளை ஆய்வோம்:**

1. தண்டனை தளங்களில் சிறை விதிகளில் எப்படி சீர்திருத்தம் கொண்டு வருவது
2. குற்ற செயலை ஒழிக்க எப்படி சீர்திருத்தம் கொண்டு வருவது

## PRISONS REFORMS AND PUNISHMENT REFORMS:

The following principles are to be considered to rehabilitate the offenders / prisoners.

1. The offenders should be confined to jails for only a minimum period. This will help in his rehabilitation.
2. The woman prisoner should be treated more generally. They should be allowed to meet their children frequentl. Particularly the woman who fall prey to sex offences should be treated with sympathy. Their children should be assured of good life.
3. The prisoners belonging to peasant class should be offorded on opportunity to go to their fields during harvesting season on temporary tickets on leave.
4. In the prison, certain privacy should be allowed to meet their near relatives.
5. The present system of limiting the scope of observing festivals / functions merely to more good food for jail inmates need to be changed to other meaningful programmes.
6. The existing rules relating to the restrictions of postal mail of inmates should be liberalized.
7. There should be greater emphasis on vocational training to inmates.
8. There should be a general policy to cut – short inmates sentence in case of good behaviour.
9. There should be after – care facilities and opportunities.
10. An intensive publicity programme through the media of PRESS / T.V. to create a right climate in society to accept the released prisoners.

**கீழ்காணும் கோட்பாடுகள் குற்றவாளிகளையும் கைதிகளையும் சீர்திருத்த உதவும் :**

1. குறைந்த காலத்திற்கே கைதிகளையும் குற்றவாளிகளையும் சிறையில் அடைக்க வேண்டும். இப்படி செய்தால் அவர்களை சீர்படுத்த முடியும்.
2. பெண் கைதிகளை மிகவும் பெருந்தன்மையுடன் நடத்த வேண்டும். அவர்கள் தங்கள் குழந்தைகளைப் அடிக்கடி பார்க்க ஆவண செய்ய வேண்டும். குறிப்பாக குற்றங்களில் மாட்டி இறையான பெண்களை அன்புடன் நடத்த வேண்டும். அவர்களின் குழந்தைகளுக்கு வெளியில் சமுதாயத்தில் நல்வாழ்க்கை அமைந்திட உறுதி அளித்திட வேண்டும்.
3. விவசாய கூலிவர்க்கத்தை சேர்ந்த கைதிகளுக்கு அவர்கள் நிலங்களை பார்த்திட சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அவர்களுக்கு தற்காலிமான விடுப்பு கொடுத்து அனுப்ப வேண்டும். இதனை அறுவடை நாட்களில் செய்வது நல்லது.
4. ஜெயிலில் உள்ளவர்களை அவர்களின் நெருங்கிய உறவினர்களை சந்திக்க அந்தரங்க சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.
5. விழாக்காலங்களில் பண்டிகை நாட்களிலும் நல்ல உணவு ஜெயிலில் தருகிறார்கள். இதுபோதாது. அர்த்தமுள்ள நல்ல நிகழ்ச்சிகளை ஜெயிலில் உள்ளவர்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
6. தபால் மெயில் கார்டுகள் பெறும் மற்றும் அனுப்பும் நிபந்தனைகள் ஜெயில் கைதிகளுக்கு தருவதற்கு சில விதிமுறைகள் உள்ளன. இதனை கைதிகளுக்கு சௌகர்யப்படுத்தி நல்லதொரு முறையினை ஏற்படுத்த வேண்டும்.
7. வேலை வாய்ப்பு தொழிற்சம்மந்தப்பட்ட பயிற்சிகளை ஜெயிலில் தர ஏற்பாடு செய்ய வேண்டும், ஜெயிலை விட்டு வெளியில் வரும் போது இது உதவும்.
8. நல்ல நடத்தை உள்ளவர்களின் தண்டனை காலத்தை வெகுவாக குறைக்க பொதுவான ஒரு திட்டத்தினை வகுக்க வேண்டும்.
9. ஜெயிலில் இருந்து விடுதலையான பின்பு அவர்களுக்கு பிற்காலத்தில் உதவும் உஷார் நிலையை ஏற்படுத்த வேண்டும்.
10. சமுதாயத்தில் ஜெயில் தண்டனை அடைந்தவர்கள் ஏற்றுகொள்ளும் முயற்சியில் செய்திதாள் மற்றும் தொலைக்காட்சிகளை பயன்படுத்தல் வேண்டும்.

Further as part of reformatory measures, there is presently an in built system in the form of open air jail or probation of offender or parole or juvenile court/jail.

**1. OPEN AIR JAILS:**

Open prisons are with minimum security arrangements for inmates. This provides chances for inmates to rehabilitate them in society after final release. This kind of prison is called open air jails. It is based on self discipline and sense of responsibility towards the group in which he lives. It has been accepted to avoid over crowding in the jail. The primary function of the law and punishments to protect the society from criminal and this can be best achieved by bringing change in the attitude of

offenders towards their followmen. Open air camps have been used as one of the best after –care measure for rehabilitation of offenders.

**2. PROBATION OF OFFENDERS:**

The release of offenders on probation is one of the measures which may be used by courts as an improved form of non-custodial alternative in place of jail. This correctional device is increasingly used by the magistracy in modern times. Definition of probation – the release of offences on probation is a treatment device prescribed by the court for persons convicted of offences against the law, during which the probationer lives in the community and regulates his own life under conditions imposed by the court or other constituted authority and is subject to supervision by a probation officer. But there is no sufficient probation officer to watch and dispose the individual case.

## குமரப்பருவக் குற்றங்கள்

## JUVENILE DELINQUENCY

A JUVENILE or child means a person who has not completed 18 years of age. The Juvenile delinquency means a criminal act prohibited by law for children upto 18 years that can be taken cognizance by a children Court. Juvenile is an ADOLESCENT person between childhood and man or womanhood. The meaning is also explained as the delinquent child who is habitually refusing to obey the reasonable and lawful commands of his parents or other persons of lawful authority, who is habitually uncontrolled, disobedient, wayward, dropped from home or school and endangering the morals, health, welfare of himself or others, incorrigible and decent. The Juvenile delinquency also includes acts such as begging, vagrancy, obscenity, loitering, small theft, drinking, gambling and in the prostitution house.

In this connection, the provisions of the JUVENILE JUSTICE ( CARE AND PROTECTION OF CHILDREN) ACT,2000 shall be borne in mind.

The child in need of care and protection means any child who is found without any home or settled place or who resides with guardian.

**CAUSE OF JUVENILE DELINQUENCY:**

1. Juvenile who does not have parental control. They have opportunity to commit crime.
2. Broken home and lack of parental affection.
3. The luxuries in modern life of the younger generation.
4. The divorce in the family.
5. The Guardian of the child keeps the child under threat.
6. The guardian or others who killed some other children.
7. Unfit Parent or Guardian to control.
8. Child who does not have parent and they are abandoned.
9. Child tortured for sexual abuse or illegal acts.

10. Child put under drug abuse.
11. Child who is abused for illegal gains,
12. Child who is the victim of Natural calamity war or Civil Commotion or Tsunami.
13. Lack of Physical maturity, Low intelligence or other biological Factors.

**THE ROLE OF POLICE IN DEALING WITH JUVENILE DELINQUENCY:**

The Police has a vital Role in the prevention and treatment of Juvenile delinquency. The function of a Police Officer comes under two parts.

1. Duties under the Juvenile Justice (Care and Protection of Children/Act)
2. Other functions and programmes.

**Therefore the Role of Police is:**

1. to find out whether a child is a neglected child or a delinquent child,
2. to have in mind that the Juvenile delinquent is to face "HEARING" and "NOT TRIAL" They are called "delinquents " and "Not Accused"; NOT in the Criminal Court; but Juvenile Court by the Juvenile Justice Board,
3. to use Special Juvenile Police Unit or Woman Police of mufti Police man/officers.
4. to deal with Potential delinquents, Lock up and hand cuff should not be used.
5. to send them only to Juvenile institutions such as Children Home, Special School, Observation Homes, Remand Homes, Certified Schools and Borstal where discipline, trade, sports, education are taught.
6. while doing Beats Patrols, Watch the affected areas like Prostitution, gambling, busy streets and areas, Parks and Cinema halls and find out their problems.
7. to conduct Special programmes to educate them
8. to watch and guide young traffic offenders.

**REMAND HOME:**

The Juveniles delinquents in need of short tem detention are sent to Remand Homes. The following types of children are sent to Remand Homes –

a) Under – trial children

b) Young persons about whom enquiries are made

c) Young persons who are waiting for hearing (or) trial

d) Young persons waiting to be send to a school (or) Borstal (Borstal School sent for long term treatments). The normal period of detention ranges from 3 to 6 months.

## குமர பருவ குற்றங்கள்

குமர பருவம் அல்லது சிறுவர்கள் என்பது 18 வயதுக்குட்பட்ட பருவத்தினரை குறிக்கும். குமர பருவ குற்றம் என்பது 18 வயதுக்குட்பட்ட நபர்கள் சட்டத்திற்கு புறம்பான காரியங்களை செய்வதும் அதனால் அவர்கள் கோர்ட்டால் தண்டனை விசாரணையை சந்திப்பதும் ஆகும். குமர பருவம் என்பது குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் இடைப்பட்ட நிலை ஆகும். குற்றவாளி சிறுவர்களை மேலும் விவரிக்கையில் அவர்கள் எப்போதும் தம் பெற்றோர்களுக்கு அடிபணியா தன்மையை காட்டுபவர்களாகவும் பெரியவர்கள் கட்டுப்பாட்டில் இல்லாதவர்களாகவும், கீழ்ப்படியாதன்மையை உள்ளவர்களாகவும் ஊர்சுற்றித் திரிபவர்களாகவும் தம்முடைய மற்றும் மற்றவர்களின் நலத்தைப்பற்றி நினைக்காதவர்களாகவும் நாகரீகம் அற்ற தன்மையை கொண்டு திருந்தாதவர்களாகவும் உடையவர்களே. இந்த குமர பருவ குற்றவாளிகள் செய்யும் குற்றங்களாவன, பிச்சை எடுத்தல், சுற்றித்திரிதல், அசிங்கமான காரியங்களை செய்வது, மனம்போன போக்கில் திரிவது , சிறு திருட்டுகள் செய்வது, மது அருந்துவது, சூதாடுவது, விபச்சார விடுதியில் கிடப்பது போன்றவை.

இதன்படி நோக்கின் , குமர பருவ நீதி மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு சட்டங்களை -2000 தெரிந்து கொள்வது சால சிறந்தது. இந்த சட்டத்தில் கண்ட சிறுவர்கள் தங்களுக்கென்று வீடு இல்லை, பராமரிப்பு இல்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

### குமர பருவ குற்றத்திற்கான காரணங்கள்

1. பெற்றோர்களின் பிடிப்பில் இல்லாத சிறுவர்கள் குற்றம் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.
2. சிதறிய குடும்பம் மற்றும் பெற்றோர்களின் அரவணைப்பு, அன்பு இல்லாமை
3. தம் இளமை பருவத்தில் நவீன நாகரிக மோகங் கொண்டு அதிக வாழ்க்கைத் தரத்தில் நாட்டம் செலுத்துவது.
4. குடும்பத்தில் விவாகரத்து நடப்பது.
5. குழந்தையின் பொறுப்பில் உள்ளவர்கள் எப்போதும் அவர்களை பயத்தில் வைத்திருப்பது.
6. சிறுவர்களின் பராமரிப்பில் உள்ளவர்கள் மற்ற சிறுவர்களை கொலை செய்த நிலையை உண்டாக்கியது.
7. சிறுவர்களை கட்டுப்பாட்டில் வைக்கமுடியாத பெற்றோர்கள் மற்றும் வளர்ப்பவர்கள்.
8. தாய், தகப்பனற்ற சிறுவர்கள், அநாதையாக விடப்பட்டவர்கள்
9. சிறு பருவத்தில் செக்ஸ் குற்றங்களுக்கு அடிமைப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுத்துதல்
10. போதை பொருட்களுக்கு தவறான முறையில் பயன்படுத்தப்பட்ட சிறுவர்கள்.
11. சிறுவர்களை வைத்து சட்டவிரோத லாபத்துக்கு பயன்படுத்துதல்
12. இயற்கையின் சீற்றத்திற்கும், போர் காலங்களிலும், உள்நாட்டு கலவரங்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள்.

13. இயற்கையில் உடற்கூறு நிலை மற்றும் படிப்பறிவு அல்லது போதுமான அறிவுத்திறன் இல்லாமை

## குமர பருவ குற்றத்தினரை கையால்வதில் போலிசாரின் பங்கு:

குமர பருவ குற்றத்தினரை கையால்வதில் போலிசாருக்கு மிகவும் முக்கிய பங்குண்டு. அவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. குமர பருவ நீதி மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு சட்ட விதிகளை தெரிந்து கொள்வது, அதன்படி நடப்பது.

2. போலிசாரின் அலுவல்களும் மற்றும் அவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளும், மேற்சொன்ன இரண்டு வகைகளின் அடிப்படையில் போலிசாரின் பங்குகளை கீழே குறிப்பிட்டபடி நடத்த வேண்டும்.

    i. முதலில் ஒரு சிறுவன் அநாதையா அல்லது குற்றம்புரிபவனா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

    ii. குமர பருவ குற்றவாளிகளின் வழக்கில் உள்ள சொற்றொடர்களின் வித்தியாசங்களை புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் வழக்கை "டிரையல்" என்று சொல்ல கூடாது, " ஹியரிங்' என்று சொல்ல வேண்டும். "அக்கூஸ்டு" என்று சொல்லக் கூடாது, "டெலின்குவென்ட்" என்று சொல்ல வேண்டும். "கோர்ட்" என்று சொல்லக்கூடாது, "சிறுவர் சீர்திருத்த பள்ளி " என்று சொல்ல வேண்டும்.

    iii. குமர பருவ தனி போலிஸ் படை அல்லது மகளிர் போலிஸ் அல்லது மப்டி போலிஸ் அவர்களை கையாள வேண்டும்.

    iv. நன்கு தெரிந்த குமர பருவ குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்தும்போது லாக்-அப்பையும், கை விலங்கையும் பயன்படுத்தக்கூடாது.

    v. இவர்களை சிறைச்சாலைக்கு அனுப்பக்கூடாது. இவர்களை அனுப்பும் இடங்களுக்கு பெயர்கள், சிறுவர் இல்லம், விசேஷ பள்ளி, சீர் திருத்தப்பள்ளி, ரிமாண்டு இல்லம், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சீர் திருத்தப்பள்ளி மற்றும் போர்ஸ்டல் பள்ளி ஆகும். இங்கு அவர்களிடம் விசாரணை நடத்தப்படும், கல்வி புகட்டப்படும், விளையாட்டு மற்றும் தொழிற் கல்வி சொல்லித்தரப்படும். விசாரணையின் போது வக்கீல்கள் தேவையில்லை.

    vi. ரோந்து பணி செய்யும்போது சிறுவர்கள் பாதிக்கும் இடங்களை கண்காணிக்கவேண்டும். இத்தகைய இடங்கள் பொதுவாக விபச்சார விடுதி, நெருக்கமான பகுதி, பார்க் மற்றும் சினிமா கொட்டகைகள்.

    vii. விசேஷ முகாம்கள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்தி அவர்களுக்கு நல்ல பாடங்கள் கற்பிக்க வேண்டும்.

    viii. சாலை போக்குவரத்து குற்றம் செய்யும் குமர பருவத்தினரை சரியான முறையில் வழிகாட்ட வேண்டும்.

## ரிமாண்டு ஹோம் :

ரிமாண்டு ஹோம் என்பது குமர பருவ குற்றவாளிகளை ஒரு சிறிய கால கட்டத்திற்கு கட்டுபாட்டில் அடைத்து வைப்பது. ரிமாண்டு ஹோமிற்கு கீழ்காணும் குமர பருவத்தினரை அனுப்பலாம்.

a) கோர்ட்டிற்கு (Children's Court) வழக்கு விசாரணையில் உள்ளபோது
b) அவர்கள் மீது அல்லது சிறுவர்கள்மீது விசாரணை செய்யும்போது
c) அவர்கள் வழக்கு நிலுவையில் உள்ள காலத்தில் காத்திருக்கும்போது
d) சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்புவதற்காக காத்திருக்கும்போது ரிமாண்டு ஹோமில் வைத்திருக்கும் காலம் மூன்று மாதம் முதல் ஆறு மாதங்கள் வரை

### REFORMATORY MEASURES FOR JUVENILE:

Reformation of Juvenile offender is the central themes of domiciliary treatment in correctional institutions. These correctional institutions are called observation home, Juvenile Home, Special Home, Reformatory School and Borstal. They provide to juvenile offenders adequate education, vocational training. They are committed by Juvenile courts.

### குமரப்பருவ குற்றவாளிகளுக்கு சீர்திருத்த நடவடிக்கைகள்:

குமரப்பருவ குற்றவாளிகளை அதற்கென்று உள்ள நீதிமன்றம் விசாரித்து தண்டனை அளிக்கிறது. அவர்கள் தண்டனை காலங்களில் எல்லா குற்றவாளிகளும் செல்லும் ஜெயிலுக்கு செல்ல வேண்டியதில்லை. அவர்களுக்கான ஜெயிலுக்கு பெயர்கள் இல்லம் என்ற பெயர்கள் தாங்கியே இருக்கும் அவைகளாவன கண்காணிப்பு இல்லம், சிறுவர்கள் இல்லம், சிறப்பு இல்லம், சீர்திருத்த பள்ளி மற்றும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளி, குமரப்பருவத்தில் உள்ள மற்றும் சிறுவர் நிலையில் உள்ள குற்றவாளிகளுக்கு ஒரு வீட்டில் வைத்தே சிறை தண்டனை கொடுப்பதுபோல் அர்த்தம். இந்த தண்டனை காலங்களில் அவர்களுக்கு இவர்கள் சமுதாயத்தின் பிற்காலத்தில் சேர்ந்து வாழ இடமளிக்கிறது. அத்தகைய பள்ளியில் இருந்து கொண்டு வரப்பட்டவர்கள் இன்னும் சிலர் நம் காவல்துறையில் நல்ல முறையில் பணி செய்து வருகிறார்கள் என்பதனை காண்க.

## வாடிக்கையாக குற்றம் புரிபவர்கள்

# HABITUAL OFFENDERS

Certain type of offenders repeat offences like theft, robbery, burglary and frauds. The punishment to such offenders does not correct them. For them the corrective work for habitual offenders inside the prison and keeping them engaged during the period of imprisonment is perhaps the most effective method of this ultimate reformative.

### வாடிக்கையாக குற்றம் புரிபவர்கள் :

வாடிக்கையாக திருட்டு வழிப்பறி, கன்னக் களவு, மோசடி போன்ற குற்றங்களை செய்வர்கள் சுலபமாக திருந்தமாட்டார்கள். அவர்களை ஜெயிலில் வைத்து சதா வேலை வாங்கிக்கொண்டு வந்தால் திருந்துவதற்கு ஒருவேளை சந்தர்ப்பமாக அமையலாம். இத்தகைய குற்றவாளிகள் பலதடவைகள் ஜெயிலுக்கு போவதுண்டு அவர்களை K.D. (Known Depredator ) பொபிதாவில் வைத்து போலிசார் கண்காணிப்பார்கள்.

**PAROLE :**

A prisoner can only after he has served a part of his sentence in the prison. It is essential involves an initial committal of offender to a certain period of sentence and a conditional release for same time and he has shown a sing of good behaviour. This is considered quasi judiciary. This is a last stage of correctional schemes.

மேலும் சீர்திருத்த நடவடிக்கைளில் தற்போதுள்ள நிர்வாக முறையிலேயே திறந்தவெளி ஜெயிலும், சோதித்து கண்டறியும் முறையும் பரோல் என்கிற லீவு முறையும் கைதிகளின் புனர் வாழ்விற்கு வித்தாக அமைகிறது.

1. திறந்தவெளி ஜெயிலில் திறந்தவெளி ஜெயில் என்பது திறந்து கிடக்கும் என்ற பொருள் இல்லை. ஜெயிலில் உள்ளவர்களை குறைந்த பட்ச பாதுகாப்பு கொண்டு போடப்படும் இடம், கைதிகள் தானே திருந்துவதற்கு இது சந்தர்ப்பம் அளிக்கிறது. இதன்படி கைதிகளை தங்களுடைய சுய கட்டுப்பாட்டையும் பொறுப்பையும் காட்ட சந்தர்ப்பம் அளிக்கிறது. ஜெயிலில் கைதிகளின் எண்ணிக்கை நெருக்கடியை குறைக்கிறது. சமுதாயத்தில் ஜெயிலில் இருந்து விடுதலை ஆகும் கைதிகளுக்கு இடம்பெற ஏதுவாகிறது. இது ஒரு சிறந்த சீர்திருத்த நடவடிக்கை ஆகும்.

2. குற்றவாளிகளை சோதித்து கண்டறியும் முறை - இந்த முறைப்படி கோர்ட்டு உத்திரவுப்படி ஒரு குற்றவாளியை ஜெயிலில் வைக்காமல் வெளியில் வைத்து அவர்தம் நன்னடத்தையை கவனித்து சோதித்து கண்டறிவதாகும். இந்த காலங்களில் குற்றவாளி சமுதாயத்தினரோடு சேர்ந்து வாழ்கிறான். ஆகவே அவன் திருந்தவும் நல்வாழ்வு அடையவும் ஏதுவாகிறது. ஆனால் இவர்களை கவனிக்க போதுமான கண்காணிப்பு அதிகாரிகள் இல்லை இவர்களை சோதித்து பார்ப்பது போலிசாரின் வேலையும் இல்லை.

3. பரோல்- ஒரு கைதி தண்டனை காலத்தில் ஒரு பகுதியை கடந்தபிறகு பரோல் என்ற லீவு முறையில் வெளியில் வருவது, ஒரு குறிப்பிட்ட சில காலம் வெளியில் இருக்கலாம். அவன் திருந்துவதற்குள்ள சூழ்நிலையை நம்புகிறான். இது ஜெயிலில் இருக்கும் ஒருவனின் கடைசி கால சீர்திருத்த முயற்சி ஆகும். பரோலில் உள்ளவன் ஜெயிலுக்கு போய் பிறகு வெளியே வருகிறான். புரஷேனில் உள்ளவன் ஜெயிலுக்கு போகாமலேயே வெளியில் இருக்கிறான். இவர்கள் சமுதாயத்தோடு வாழ ஓர் அளவிற்கு நல்ல சூழ்நிலை அமைகிறது.

From the point of view of social force and suppression of criminality, the following reformatory measures in Indian criminal law are suggested.

1. The existing law does not provide compensation to victims of crimes. Punishment of accused may offer some condition, but no pecuniary satisfaction to victims. Adequate money in the form of FINE may be collected and given to victim.

2. Duplicity of legal provision for the same offence should be avoided to make sentencing more definite and effective. (For example provisions for CORRUPTION ACT).

3. IPC should be modified to deal with and punish suitably political offenders (particularly during the election period) and White Collar Criminals.

4. Crimes relating to human body shall be punished with a term of imprisonment while those relating to the property should punishable with heavy fines.

5. The death penalty should be imposed though in practice it is sparingly used rarest of rare cases.

6. Certain crimes like homosexuality and prohibition shall not go unpunished. Certain sex offences by consenting adults can be examined to be allowed.

7. The law relating to preventive detention need to be modified so as to prevent its abuse or misuse; the controversy on POTA; finally the Act was repeated.

8. The system of collection of intelligence about criminals and the system of reporting should be over hauled so that facts reported correctly.

9. There is need to prevent the interference in investigation of cases / arrest of accused by politicians, lawyers and press persons, which many times destroy the image of law enforcing agencies.

10. Crime repeating continues. The reporting procedures therefore needs to be over hauled.

11. The Police in India is looked with distract and bias. They are generally accused of misuse of power. In situations of stress action, the Police is often criticized for atrocities and excess. Public and press criticism has a demoralizing effect on police officials. They find it difficult to perform their law enforcement duties. The dearth of public co-operation is a contributing factor for the Police failure. A regular community tiausoning exercise need to taken and their co-operation ensured.

சமுதாய சக்திகளின் பார்வையிலிருந்தும் குற்ற நடவடிக்கைகளை குறைக்கும் பாங்கினிலிருந்தும் இந்திய சட்டப்படி கீழ்காணும் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுப்பது குற்றவாளிகளை திருத்துவதற்கும் குற்றத்தை குறைப்பதற்கும் ஆலோசனை சொல்லப்படுகிறது.

1. குற்ற செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஈட்டுத்தொகை வழங்கும் திட்டம் தற்போதுள்ள சட்ட விதிகளில் இல்லை. குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனை வழங்குவது மற்றும் ஆறுதல் அளிக்கலாம். ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டம் ஈடாகவில்லை சிறிதளவு அளவு குற்றவாளிகளிடமிருந்து அபராத தொகையாக வாங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கலாம். சாலை விபத்துகளில் மரணம் அடைந்தவர்கள் குடும்பம் மற்றும் விபத்தில் ஊனமடைந்தவர்களுக்கு சரியான ஈட்டுத்தொகை கொடுக்க சட்டத்தில் இடம் உள்ளது,

2. குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைப்பதில் உறுதி என்ற எண்ணமும் தண்டனை இருக்க வேண்டும் என்ற போக்கும் சட்டத்தில் இடமுண்டு. லஞ்சஒழிப்பு குற்றங்களுக்கு லஞ்சஒழிப்பு சட்டத்திலுள்ள தண்டனை முறையே நினைவில் கொள்ள வேண்டும்.

3. அரசியல்வாதிகள் குற்றம் புரியும்போது வழக்கு போடுவதிலும் தண்டிப்பதிலும் இ.பி.கோவில் சரியான தண்டனைமுறை இல்லை. குறிப்பாக தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் மோசடி செய்யும பேர்வழிகளையும் சரியாக தண்டிக்கப்பட முடியவில்லை.

4. மனித உடம்புக்கு எதிராக செய்யும் குற்றங்களுக்கு மிக பெரிய அளவில் அபராதம் விதிக்க வேண்டும்.

5. மரண தண்டனை தேவையான குற்றத்திற்கு அளிக்கப்பட வேண்டும். தற்போது மரண தண்டனை அளிப்பது மிகவும் அரிதான குற்றங்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

6. ஓரின சேர்க்கை மற்றும் மதுவிலக்கு குற்றங்கள் தண்டிக்கப்படாமல் போய்விடுகிறது. இது சரியல்ல அதே சமயத்தில் வயது வந்தவர்கள் இருபாலரும் இருவரும் ஒத்துக்கொண்ட சந்தர்ப்பங்களில் குற்றங்கள் தேவையில்லாமல் வழக்கு போடுவது போன்ற சட்டத்தில் உள்ள குறைபாடுகளை நீக்க வேண்டும்.

7. தடுப்பு காவல் சட்டத்தில் குற்றவாளிகளை சிறையில் அடைப்பது பதவி துஷ்பிரயோகத்திற்கு ஏதுவாகிறது. இதை தடுக்க சரியான மாற்றங்கள் சட்டத்தில் செய்ய வேண்டும். தற்போது சட்டம் சர்சைக்கு உள்ளாகியது என்பது நினைவில் கொள்க.

8. குற்றங்களுக்கு எதிராக சேகரிக்கும் தகவல்கள் அதனை தாக்கல் செய்யும் முறையில் சரியான முறையில் இல்லாததால் அதனை சீர்படுத்த வேண்டும்.

9. தற்போது குற்ற வழக்குகளை புலன்விசாரணை செய்யும்போது அரசியல்வாதிகள் வக்கீல்கள் மற்றும் செய்தியாளர்களின் தலையீடு அதிகம் உள்ளது. ஆகவே இதனை தடுத்து நிறுத்த சட்டத்தில் இடம் வேண்டும்.

10. குற்ற முதல் தாக்கல் அறிக்கை செய்யும்போது இன்றைக்கு தவறான முறைகேடுகள் உள்ளன. இதனால் குற்றங்களின் தன்மைகளில் மறைப்பு உண்டாகிறது. சிறுமையாக்கப்படுகிறது. சில சமயங்களில் குற்றங்கள் வெளியில் சொல்லப்படாமலேயே போய்விடுகிறது. தற்போதுள்ள குற்ற முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யும் முறையில் சட்டப்படியான சீர்படுத்துதல் வேண்டும்.

11. இந்தியாவில் காவல்துறையின் செயல்பாட்டில் நம்பிக்கை இல்லாத் தன்மை மிகவும் அதிகமாக வளர்ந்துவிட்டது. காவல்துறை ஒருதலைபட்சமாக செயல்படுவதாக எடுத்துக்கொள்ளபடுகிறது. பொதுவாக காவல்துறை தங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகக் கருதப்படுகிறது. கடுமையான நடவடிக்கை எடுக்கும் கால கட்டத்தில் காவல்துறையினர் மீது அராஜக செயல் செய்ததாகக் குறை கூறப்படுகிறது. பொது மக்களும் பத்திரிகையாளர்களும் காவல்துறையினரை கண்டித்து கேவலப்படுத்துவதால், காவல்துறையினரிடையே ஒழுக்கமற்ற தன்மை தலைதூக்க நேரிடுகிறது. அவர்கள் சட்டத்தை நிலை நிறுத்தும் அலுவல்கள் தடைபடுகிறது. பொது மக்களின் ஆதரவு இல்லாததால் காவல்துறையின் அலுவல்களில் தோற்கும் நிலை உருவாகிறது. இதற்கெல்லாம் தீர்வு காணவேண்டுமென்றால் சமுதாயத்தில் உள்ள முக்கியஸ்தர்களையும் நல்லவர்களையும் கொண்ட ஒரு நல்லிணக்க குழுவை ஏற்படுத்தி அவர்களுடன் அடிக்கடி ஒரு கூட்டத்தை கூட்டி அவர்களை தன்வசம் வைத்துக்கொண்டு காவல்துறையின் நல்ல,

நேர்மையான திறமையான செயல்களை சமுதாயத்தினருக்கு உணர்த்த வேண்டும். இத்தகைய அமைப்பைதான் ஆங்கிலத்தில் Community Liaisoning Group என்று சொல்லுவார்கள். இது புதுவை காவல்துறையில் தற்போது செயலில் உள்ளது. இதனை ஒழுங்கானவர்களை கொண்டு ஒழுங்காக செயல்படுத்தினால் காவல் துறையினரின் சீர்படுத்தும் நடவடிக்கைகள் நல்ல முறையில் பலன் தரும்.

## VIOLENCE AND POLICE PRESENT TRENDS IN LAW AND ORDER :

Violence means an imprecise term of causing physical harm or injury or mental harm. Violence acts are part of crimes. Violence is meant to be frightening others. It is enough to frighten rather than injure. Violence is followed by damage with internet to endanger life.

வன்முறை என்பது வெறுக்கக் கூடிய, மனதிற்கும் உடலுக்கும் ஊறு விளைவிக்கக் கூடிய ஒரு செயல். வன்முறை என்ற செயலால் அச்சுறுத்தல் ஏற்படுகிறது. வன்முறை செய்பவர்களும் தூண்டுபவர்களும் காயம் ஏற்படுத்துவதை விட அச்சுறுத்தல் ஏற்படுத்துவதே போதும் என்று நம்புகிறார்கள் எனவே அச்சுறுத்தல் ஏற்படுத்துவது வன்முறையின் ஒரு பங்கு. மேலும் வன்முறை செய்யும் போது பொருட்களை நாசம் செய்வது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் எண்ணத்தை கொண்டது என்பது திண்ணம்.

ஒரு கும்பல் வன்முறை கூட்டமா அல்லது சாதாரண கூட்டமா என்பதை போலிசார் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். கூட்டம் கூடும் இடம் சூழ்நிலை ஆகியவைகளை கருத்தில் கொள்ள வேண்டும். திருவிழா, கோயில்விழா, சினிமா தியேட்டர்களில் கூடும் கூட்டம், மார்க்கட் அல்லது கலை நிகழ்ச்சிகளை பார்ப்போர் கூட்டங்களை வன்முறை கூட்டங்கள் என்று கருத்தில் கொள்வது தவறு. பல்வேறுபட்ட போராட்டங்கள் செய்யும் கூட்டங்கள் வன்முறை செய்யக்கூடிய கூட்டங்கள் என்று போலிசாரின் பார்வைக்கு எடுத்து கொள்ள வேண்டும் IPC பிரிவு 141-ல் கொண்ட விபத்துக்களை நாம் கணக்கில் எடுத்து கொள்ள வேண்டும் அந்த கூட்டத்தின் எண்ணங்களை தீர்மானிக்க வேண்டும் அவர்கள். அவர்கள் ஐந்து அல்லது ஐந்து பேர்களுக்கு மேல் கூடி பொதுவான ஒரு நோக்கத்திற்கு சட்டத்திற்கு விரோதமாக கீழ்காணும் செயல்களை செய்யும் போது சட்ட விரோதமான கூட்டமாகிறது.

| | | |
|---|---|---|
| முதலில் | - | மத்திய மாநில அரசாங்கத்தையும் பாராளுமன்ற சட்ட சபைக்களையும் அகற்ற செய்யும்போது |
| இரண்டாவது | - | சட்டத்தை நிலை நாட்டும்போது தடுக்கும் செயல் |
| மூன்றாவது | - | சொத்துக்களை நாசம் செய்யும் செயல், அத்துமீறி நுழையும் செயல் அல்லது ஒரு குற்றத்தை புரியும் செயலை செய்யும் போது |
| நான்காவது | - | தன்னுடைய செயலால் ஒருவனிடமிருந்த சொத்தினை அபகரிக்கும்போது |
| ஐந்தாவது | - | தன் குற்ற செயலால் ஒருவனை சட்டப்படி செயல்படாமல் இருப்பதற்கும் சட்டத்திற்கு முரணாக செயல்பட வைப்பதற்கு |

மேற்படி குற்றங்களை செய்தல் I.P.C. ன்படி கீழ்கண்ட குற்றசெயல்கள் உண்டாகிறது.

S. 143 சட்ட விரோதமாக 5 பேர்களுக்கும்மேல் கூடியிருப்பது

S. 147 சட்ட விரோதமாக 5 அல்லது 5 பேர்களுக்கு மேல் குற்றம் புரியும் நோக்கத்துடன் ஒரு குற்ற செயலை செய்வது. இதை கலவரம் என்று சொல்லலாம்.

S. 148 மேற்படி சட்ட விரோதமான கூட்டம் தங்களிடம் ஆயுதங்களை வைத்திருப்பது. மேற்படி குற்றம்மெல்லாம் பிடிக்கக் கூடிய குற்றம். உடனே அவர்களை கைது செய்து மேற்கொண்டு வன்முறை செயல்களை தடுப்பதற்கு ஏதுவாகும். முன் கூட்டியே தகவல்களை சேகரித்து போதுமான காவலர்களை அந்த இடத்தில் வைத்திருப்பது போலிசரின் நல்ல செயலாகும். போலிசாருக்கு மேற்படி சூழ்நிலையை சமாளிக்க சட்டத்தின் பல அதிகாரங்களும் கடமைகளும் உண்டு.

S. 23 POLICE ACT - இதன்படி போலிசார் தகவல்களை சேகரித்து குற்றம் நடவாமல் இருப்பதையும் குற்றம் நடந்தால் கண்டுபிடிப்பதையும் பொது அமைதியை நிலை நாட்டுவது தலையாய கடமை ஆகும்.

Cr.PC. படி கீழ்காணும் அதிகாரங்கள் போலிசாருக்கு உண்டு. அதன்படி குற்றத்தை தடுக்க, கண்டுபிடிக்க, அமைதியை நிலை நாட்ட கீழ்காணும் சட்ட நடவடிக்கை அவ்வப்போது உடனடியாக எடுக்க வேண்டும்.

S. 149 Cr.P.C. படி போலிசாருக்கு ஒரு பிடிக்கக்கூடிய குற்றத்தை தடுக்கும் கடமையும் அதிகாரமும் உண்டு.

S. 151 Cr.P.C. ஒருவனே அல்லது ஒரு கும்பலோ சட்ட விரோத செயல்களை செய்வார்கள் என்று தெரிந்தபோது உடனடியாக அவர்களை கைது செய்து 24 மணி நேரத்திற்குள் (Executive Magistrate) எக்ஸிகுடிவ் மாஜிஸ்ரேட்டிடம் ஆஜர் படுத்த வேண்டும். பிறகு அவர்களின் செயலுக்கேற்ப கீழ்க்கண்டபடி E.M.-க்கு தகவல் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

S. 106 Cr.P.C. தண்டனை அடைந்த குற்றவாளியை மேற்கொண்டு குற்ற செயல் செய்யாமல் இருக்க பாதுகாப்பு பாண்டுமூலம் வாங்கவேண்டும்.

S. 107 Cr.P.C. அமைதியை நிலைநாட்ட ஒருவனையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களையோ EM மூலம் பாதுகாப்பு பாண்டு எழுதி வாங்கவேண்டும்

S. 108 Cr.P.C. அரசாங்க அல்லது தேசத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபடுவராயின் அவர்களிடமும் பாதுகாப்பு பாண்டு E.M. மூலம் வாங்கவேண்டும்.

S. 109 Cr.P.C. சந்தேகப்படும் நபர்களிடமிருந்து பாண்டு வாங்குதல்

S. 110 Cr.P.C. வாடிக்கையான குற்றவாளிகளிடமிருந்து மீண்டும் குற்ற செயல் புரியாமல் இருக்க பாண்டு வாங்குதல். இது ரவுடிகளை ஒடுக்குவதற்கு ஒரு சிறந்த சட்டமுறையான நடவடிக்கை ஆகும்.

S. 129 Cr.P.C - சட்ட விரோதமான கூட்டத்தை போலிஸார் முறைப்படி கலைப்பதாகும். அப்போது கலவரக்காரர்களை போலிசார் கைது செய்யலாம்.

S. 130 Cr.P.C – சட்ட விரோதமான கூட்டத்தை கலைக்க இராணுவம் மற்றும் ஆயுதம் தாங்கிய போலிஸை பயன்படுத்துவது. இதற்கு E.M. உத்தரவு அவசியம்.

S. 133 Cr.P.C. – சில இடத்தில் சிலரால் தொந்தரவான செயல்களும் தடயங்களும் ஏற்படுத்தினால் அதனால் ஒரு பிரச்சனை வரும் என்று தகவல் இருந்தால் E.M. உத்திரவோடு அவைகளை அப்புறப்படுத்துவது.

S. 145 Cr.P.C. - நிலம் மற்றும் தண்ணீர் சம்மந்தப்பட்ட தகறாரால் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுமாயின் E.M. மூலம் தீர்த்து வைப்பது.

S. 30(2)- காவல் சட்ட (Police Act) –படி காவல்துறை கண்காணிப்பாளர் சீர்படுத்தும் உத்திரவு போட்டு கூட்டங்கள், ஊர்வலங்கள், போராட்டங்கள் ஆகியவைகளால் தகுந்த கட்டுப்பாட்டிற்குள் வைப்பது.

S. 144 Cr.P.C - தடை உத்திரவு - District Magistrate போடுவது கூட்டத்தோடு கூடிய வன்முறைகளும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்திய வன்முறைகளும் சில சமயங்களில் போலிசுக்கு புகார் செய்யப்படுகிறது. ஆனால் எல்லா வன்முறைகளும் போலிசுக்கு ரிப்போர்ட் ஆவதில்லை. ரிப்போர்ட் ஆகும் வன்முறை செயல்களில் எல்லாம் கீழ்காணும் அம்சங்கள் உள்ளது.

- குற்ற செயல்கள்
- சாட்சியங்கள் உள்ளது
- சாட்சிகளின் தெளிவாகவும் அச்சுறுத்தல்களை சமாளிக்கும் நிலையும்சட்ட விரோதமான கூட்டங்கள் செய்யும் வன்முறைகள் கீழ்கண்ட சந்தர்ப்பங்களில் நடைபெறுகிறது.

✓ ஸ்டிரைக் காலத்தில்

✓ உண்ணாவிரதம் சில நாட்கள் ஆகும்போது

✓ அரசியல் காரணங்களுக்கு நடக்கும் நிகழ்ச்சிகள்

✓ ஜாதி மத காரணங்களால் நடக்கும் நிகழ்ச்சிகள்

✓ மொழி இனம் மற்றும் நதிநீர் பங்கீடு காரணங்களால்

✓ போலிசுக்கு எதிர்ப்பாக போலிஸ் அத்துமீறிய செயல் செய்யும்போதும், போலிஸ் காவலில் கைதி மரணம் அடையும் போதும்

✓ பொதுபணித்துறை முனிசிபாலிட்டி போன்ற இலாக்காக்கள் அடிப்படை தேவைகள் செய்யாமல் இருக்கும்போது

✓ வதந்திகளை பரப்பும்போது

✓ மாறுபட்ட அல்லது ஒரு சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் தான் பெரிய அண்ணன் என்ற சூழ்நிலை உருவாகும் போது

ஒரு காலத்தில் போலிஸ் ஒடுக்கக்கூடிய (Oppresion) அடக்கக் கூடிய (Supperession) மற்றும் அடித்து சமாளிக்க கூடிய ஒரு அமைப்பாக இருந்தது. ஆனால் தற்போதுள்ள கால கட்டத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க உ்ணமையின் அடிப்படையில் சட்டத்தால் மட்டுமே செயல்பட வேண்டும். இல்லையெனில் வன்முறை அதிகமாகி கட்டுக்கு அடங்காமல் போகும். காரணம் மக்களிடையே விழிப்புணர்வு அதிகம். மக்கள் சக்தி நன்றாக போனால் போலிஸ் சக்தி பயனற்று போகும். அதே

சமயத்தில் சிறு சிறு காரணங்களுக்கு போலிஸ் தன் சக்தியை பயன்படுத்துமேயானால் மனித உரிமை ஆணையத்திற்கு தக்க பதில் சொல்ல வேண்டும். மேற் சொன்ன நிலைபாட்டினை மனதில் கொள். நேரு அவர்கள் சொன்னதை நினைவூட்டுகிறோம்.

" கூடுமானவரையில் துப்பாக்கி பிரயோகம் செய்யாதீர்கள்"

" கூட்டம் (மக்கள் கூட்டம்) போலிஸாரின் எண்ணிக்கையை விட அதிகம்"

**NEHRU -** "As far as possible No use of fire arm"
" Crowd is numerically greater than the Police"

அதே சமயத்தில் வன்முறையாளர்களின் ஆதிக்க சதுர் ஆட்டத்திற்கு துணைபோகவோ, சும்மா நிற்கவோ நமக்கு ஏன் வம்பு என்று ஒதுங்கி நிற்கவோ கூடாது

நினைவிற் கொள்க – குஜராத்தில் நடந்த வன்முறையில் எத்தனை அப்பாவி மக்கள், குழந்தைகள் கொல்லப்பட்டனர். எத்தனை கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் தீயினால் வெடிமருந்தினால் அழிக்கப்பட்டுள்ளது. மற்றும் சமீபத்தில் மேற்கு வங்கத்தில் நடந்த கலவரங்களும் படுகொலைகளும் சிந்தித்துப் பார்த்தால் கலவரத்தின் நோக்கமும் விளைவும் நன்கு புரியும்.

சாதாரண வன்முறை கூட்டத்தை சந்திப்பதற்கும் தீவிரவாத பயங்கரவாத வன்முறை கூட்டத்தை சந்திப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள். தீவிரவாத, பயங்கரவாத குற்றவாளிகளை ஒடுக்கி அப்பாவி ஜனங்களைக் காக்க எந்திர துப்பாக்கியை தான் போலிசார் ஏந்த வேண்டும்.

## வெள்ளைக் காலர் குற்றங்கள்
## WHIT COLLAR CRIME

It is common knowledge that certain professions offer opportunities to courmit crimes and unethical practice. Some members of every profession succumb to criminal activities without the risk of public criticism. The concept of white collar crime is associated with the work of criminologist SUTHERN LAND–He pointed out that besides the traditional crimes such as assault, robbery, dacoity, murder, rape, kidnapping and other acts involving violence. There are some anti-social illegal activities of certain sections of the community who commit frauds in their occupation. These offences also include forgery, cheating, corruption, etc. The traditional crimes are called BLUE COLLAR crime and the frauds are named as WHITE COLLAR CRIMES

The white collar crime is defined as a crime committed by persons of respectability and high social status in course of their occupation.

The injury caused by the white collar crime is negligible to the victim. These crimes did not atract much attention because there is no loss of social status of the offender even if he caught to detected. They escape easily from prosecution. The victims in some cases of white collar crimes get benefits or except a large benefit. Hence they knowingly or unknowingly help white collar criminals.

பொது அறிவுப்படி சில தொழில்கள் சிலவகையான குற்ற செயல்களையும் ஏற்றுகொள்ள முடியாத பண்பற்ற செயல்களையும் செய்வதற்கு சூழ்நிலைகளை உருவாக்குகிறது. பொது மக்கள் கண்டனத்தில்

இருந்து தொழில் அல்லது வியாபாரம் செய்யும் சிலர் புரியும் மோசடித்தனமான குற்ற செயல்கள் தப்பிவிடுகின்றன. உத்தியோகஸ்தர்கள் தொழில் ரீதியாக புரியும் குற்ற வடவடிக்கைகளின் தத்துவத்தை முதன் முதலில் உலகிற்கு அர்பணித்தவர் குற்றவியல் நிபுணர் சதர்ன் லேண்ட் ஆகும். அவர் சொன்ன கருத்துகளில் சிலவற்றை நோக்கின், பரம்பரையாக செய்யும் சில குற்ற நடவடிக்கைகளான தாக்குதல், வழிப்பறி, கூட்டுகொள்ளை, கொலை, கற்பழிப்பு, ஆள் கடத்தல் மற்றம் வன்முறை செயல்கள் போல, சமுதாயத்தில் உயர்நிலையில் உள்ள தொழில் மற்றும் வியாபாரத்தில் செய்யப்படும் சமுக விரோத செயல்களாகும். இந்த வகையான குற்றங்களை தில்லுமுல்லு என்னும் போலி ஆவணங்கள் தயாரிப்பது என்றும், மோசடி என்றும் ஊழல் என்றும் குறிப்பிடலாம். இப்படி பரம்பரையாக வழக்கமான குற்ற செயல்களை வெள்ளை காவலர் குற்றம் என்றும் சொல்லப்படுகிறது.

உத்தியோகஸ்தர்கள் தொழில் ரீதியாக செய்யும் குற்றங்களை தாங்கள் மதிப்பிற்குள்ளவர்களாக இருந்தும் சமுதாயத்தில் மேல் நிலையிலிருந்தும் தங்கள் தொழிலோடு செய்த குற்றங்களை தான் வெள்ளை காலர் குற்றம் என்று வரையறுக்கப்படுகிறது.

மேற்படி குற்ற செயலால் பாதிக்கப்பட்டவர்களின் பாதிப்பு தாங்கக் கூடியன. இது பலரின் கவனத்தை ஈர்க்கப்படுவன அல்ல. ஏனெனில் சமுதாய பாதிப்பு இத்தகைய குற்றவாளிகளுக்கு அதிகம் இல்லை வழக்கிலிருந்து சுலபமாக தப்பிக்கும் சூழ்நிலையும் முறையும் உள்ளது. பாதிக்கப்பட்டவர்களும் மேற்படி குற்ற செயல்புரிபவர்களுக்கு துணையாக இருப்பதும் இவர்களின் பல நன்மைகளை கருதிதான் இவர்கள் தெரிந்தோ தெரியாமலோ வெள்ளை காலர் குற்றவாளிகளுக்கு உதவிபுரிகின்றனர்.

இந்தியாவில் வெள்ளை காலர் குற்றங்கள் சாதாரணமாக தொழிலில் தில்லு முல்லு செய்வதும், கணக்குகளை வேறாக எழுதுவதும், ரிக்கார்டுகளை மாற்றுவதும் திருத்தி எழுதுவதும் அவ்வப்போது நடைபெறும் செயல்களாகும். கீழ்காணும் மோசடி செயல்கள் பலவகையான உத்தியோகஸ்தர்கள் செய்யும் தொழில் ரீதியான குற்றங்களாகும்.

## HOARDING/ BLACK MARKETING AND ADULTERATION:

## பதுக்கல், கள்ள வியாபாரம் மற்றும் கலப்படும் :

இந்திய தொழிலில் பதுக்கல், கொள்ளை லாபம் ஈட்டுதல் கள்ள மார்க்கட் செய்வது சர்வ சாதாரணமாகும். அந்நிய செலவாணி மோசடி ஏற்றுமதி இறக்குமதியில் ஊழல் புரிவதெல்லாம் பணமுதலாளிகள் பெரும் லாபம் அடைய செய்யும் செயல்கள். மேலும் இவர்கள் செய்யும் தொழிலில் உணவுப் பொருட்களில் இரக்கமின்றி கலப்படம் செய்வது, நுகரும் பொருட்கள் மற்றும் எண்ணெயில் கலப்படம் செய்வது, மருந்து வகைகளில் கலப்படம் செய்வது சமுதாயத்திற்கு செய்யும் மிகவும் தீங்கான நல்வாழ்க்கையை பாதிக்கக் கூடிய செயல்களாகும். இது சம்மந்தமான வழக்குகளை துரிதமாக விசாரணை செய்வதோடு நிபுணர்களின் சோதனை ரிப்போர்ட்டுகளை தெளிவாகவும் தாமதம் இல்லாமல் வாங்க வேண்டும்.

## TAX EVASION (வரி ஏய்ப்பு):

இந்தியாவில் உள்ள வரி சட்டங்கள் வரி ஏய்ப்பு செய்பவர்களை தண்டிப்பதற்கு தகுந்த நிலையில் இல்லை வரி ஏய்ப்பு செய்யும் நபர்கள் மிகவும் பலம் வாய்ந்தவர்களாக எதையும் செய்யும் நிலையில் உள்ளனர். அவர்களில் முக்கியமானவர்கள் கலப்படம் செய்பவர்கள் தொழிலதிபர்கள், வக்கில்கள், டாக்டர்கள், இஞ்சினீர்கள் மற்றும் பெரிய காண்டிராக்ட்காரர்கள். இவர்களின் உண்மையான

வருமானத்தை கண்டுபிடிப்பது கடினம். இவர்களெல்லாம் கட்டும் வரிப்பணம் ஒரு சொற்ப அளவில் தான் உள்ளது. இவர்களிடமுள்ள கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டுவருவது அரசாங்க கஜானாவுக்கு சேர்க்க வேண்டுமென்ற குறிக்கோள் பயமிழந்து விடுகிறது.

### MEDICAL PROFESSION (மருத்துவ தொழில்) :

மருத்துவ தொழில் பார்ப்பவர்கள் பொதுவாக போலி மருத்துவ சான்றிதழ் வழங்குதல், சட்ட விரோதமான முறையில் கருகலைப்பு செய்தல், இரகசியமாக திருடர்களுக்குக் கொள்ளை கூட்டத்தினருக்கும் மருத்துவம் செய்தல், அப்படி அவர்களுக்கு மருத்துவம் பார்த்து இரகசிய சான்றிதழ் கொடுத்து குற்றத்திலிருந்து தப்பிக்க வைத்தல் அதிக பணம் சம்பாதித்து மருத்துவ காலத்தை வேண்டுமென்று நீட்டித்தல், தவறான விளம்பரங்கள் தவறான மெடிக்கல் பில் சமர்ப்பித்ததுக்கு ஊக்குவித்தல் – இவைகளெல்லாம் மருத்துவ தொழில் புரிபவர்களின் தொழில் ரீதியாக செய்யும் குற்றங்கள்.

### ENGINEERING (பொறியியல் தொழில்) :

பொறியியல் தொழிலில் காண்டிராக்டர்களோடு இரகசிய உறவு வைத்துக்கொண்டு கட்டிட மற்றும் கட்டுமான பொருட்கள் வாங்குவதிலும் தரமற்ற கட்டடங்கள் கட்டுவது, வேலை செய்வது, போலியான ஆவணங்கள் தயாரித்தல் இவர்களின் சில செயல்கள் தரமற்ற மற்றும் ஊழலுடன் கூடிய செயல்களால் கட்டிடம் கட்டுதல், ரோடு போடுதல், வாய்க்கால் வெட்டுதல், அணைகள் கட்டுதல், பாலம் கட்டுதல் இவைகளில் ஊழல் நடந்திருப்பதை செய்திதாள்களின் மூலம் சில வாராந்திர மாத இதழ்களின் மூலம் காண்கிறோம்.

## LEGAL PROFESSION
## சட்ட தொழில்கள்

வக்கீல்களின் தொழில்கள் இந்தியாவில் மரியாதையுடன் பார்க்கப்படுவதில்லை. ஒரு காலத்தில் புனிதமாகப் போன்றப்பட்ட இத்தொழில் தற்போது அப்படி இல்லை மரபுக்கும் மாண்புக்கும் மாறுபட்ட செயல்கள் இத்தொழிலில் காணப்படுகிறது. பொய்சாட்சியங்களை போடுதல், மெய் சாட்சியங்களை கலைத்தல் சாட்சிகளை தொழிலாக நடத்துபவர்களைப் பயன்படுத்தல் தர்ம சாஸ்திரங்களை மதிப்பது கிடையாது.

## EDUCATION INSTITUTIONS
## கல்வி ஸ்தாபனங்கள்

பணத்துக்காக உயர்கல்வி தொழிற்கல்வி ஸ்தாபனங்களில் மாணவர்களை பணம் வாங்கிக்கொண்டு சேர்த்தல் போலி சான்றிதழ் வழங்குதல் போலி சான்றிதழ் பேரில் மாணவர்களை சேர்த்தல். இது இளைய தலைமுறையை வெகுவாக பாதிக்கிறது.

## CAUSES FOR WHITE COLLAR CRIME
## வெள்ளை காலர் குற்றத்திற்கான சில காரணங்கள்

1. சமுதாயத்தின் உயர்ந்த நிலையில் இருக்க விருப்பமுள்ள அலுவலர்கள். அவர்களுக்கு சமுதாயத்தில் சிலர் இரகசிய ஊக்குவிப்பு - Secret encouragement to accused.
2. தொழில் நடத்துபவர்கள் தங்களின் முன்னேற்றத்திற்கு பெரும் போட்டியை சந்திக்க வேண்டி உள்ளது – Competition in Trade.
3. சுலபமாக பொய் கணக்குகளை எழுதலாம். பொய் ஆவணங்களை தயார் செய்யலாம். இவைகள் எல்லாம் அவர்கள் கையில் உள்ளன – Easy False accounts
4. இந்த குற்றம் புரிய எந்த ஆயுதங்களும் தேவையில்லை ரவுடிகளின் உறவு தேவையில்லை. கத்தியின்றி இரத்தம் இன்றி விஷப்பொருட்கள் இன்றி இந்த குற்றத்தை செய்யலாம் - No weapon required.
5. போலியான முறைகேடுகள் செய்து இன்சூரன்ஸ் பாலிசுக்கு தேவையான ஆவணங்களை சுலபமாக தயார் செய்யலாம் - Easy preparation of papers
6. எந்தவித நஷ்டம் இல்லாமல் பெரிய லாபம் ஈட்டலாம் - No Investment
7. தண்டனைகளில் இருந்து சுலபமாக விடுபடலாம் - Easy escape
8. சமுதாய பாதிப்பு அதிகம் இருக்காது. Not exiqusly exposed in the society
9. இந்த குற்ற முறையினால் அதிக பணம் சம்பாதிக்கலாம். காரணம் அவர்கள் சம்பாதித்த பணத்தை எல்லாம் கைப்பற்றுவது கடினம் - Police cannot recover the money.

## REMEDICAL MEASURES

## இந்த குற்றத்தை தவிர்க்கும் நடவடிக்கைகள்

1. மக்களின் விழிப்புணர்ச்சியை பத்திரிக்கைமூலம் உண்டாக்க வேண்டும்
2. இந்த குற்றங்களை விசாரிக்க தனி கோர்ட்டு முறை கொண்டு வரலாம்.
3. சட்டத்தில் இந்த குற்றங்கள் கடுமையாக தண்டிக்கும் வகையில் மாற்றம் கொண்டு வரலாம்
4. IPC இந்த வகை குற்றங்களுக்கு தனி அத்தியாயம் கொண்டு வரலாம்
5. இந்த வகை குற்றங்களுக்கு ஜெயில் தண்டனை ஆறு ஆண்டுகளுக்கு மேல் அபராதத் தொகை விதிக்க வேண்டும்.
6. National Crime Commission தேசிய குற்ற ஆணயம் மேற்படி குற்றங்களை கண்காணிக்க விசாரிக்க ஏற்படுத்தலாம்.
7. பொதுமக்களின் எண்ணத்தில் வெள்ளை காலர் குற்றங்களின் தீமைகளை தெளிவுபடுத்தி குற்றம் புரிபவர்களை காட்டி கொடுக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தர்ம சாஸ்திரத்தின் மேம்பாட்டினை உணரவைக்க வேண்டும். ஆகவே மக்களிடையே நல்ல நடத்தையை உருவாக்க வேண்டும்.
8. சட்டத்தில் IPC 420 போன்ற வழக்குகளை சமரம் செய்வதாக இருப்பதை நீக்க வேண்டும்.

**தெரிந்து கொள்க:**

1. IPC வெள்ளை காலர் குற்றங்கள் 269, 270, 272, to 276, 403, 406, 407, 408, 409, 420, 468, 471, 474, 477 etc.
2. Prevention of Corruption Act - லஞ்ச ஒழிப்பு தடுப்பு சட்டம்
3. Central Excise and Salt Act - மத்திய சுங்கம் மற்றும் உப்பு சட்டம்
4. Foreign Exchange Regulation Act - அந்நிய செலவாணி முறைப்படுத்தும் சட்டம்
5. Import and Export Control Act - இறக்குமதி ஏற்றுமதி கட்டுபாடு சட்டம்
6. Essential Commodities Act - அத்தியாவசிய பண்டங்கள் சட்டம்
7. Companies Act - கம்பெனி சட்டம்
8. Income Tax Act - வருமானவரி சட்டம்
9. Customs Act - கஸ்டம்ஸ் சட்டம்

## அமைப்பு ரீதியான குற்றங்கள்

# ORGANIZED CRIMES

உலகில் குற்ற தொழிலும் விஞ்ஞானமும் முன்னேற முன்னேற சமூக விரோதிகளின் குற்ற செயல்களிலும் மாறுதல் காணப்படுகிறது. கூட்டமாக ஒத்து குற்றம் புரிபவர்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை உண்டாக்குகிறது.

அமைப்பு ரீதியான குற்றங்கள் என்பது ஒருவர் அல்லது இருவருக்கு மேற்பட்ட குற்றவாளிகள் சேர்ந்து இணைந்து செய்யும் குற்றம் அல்லது சட்டத்திற்கு புறம்பாக செய்யும் செயல் ஆகும்.

An organized crime is defined as an act which is committed by two or more criminals as joint venture in an organized manner.

**பல்வேறுபட்ட குற்றம் புரியும் அமைப்புகள் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம் :**

(1) Organized predatory crime - கொள்ளையிடுகிற அல்லது கொல்லுகின்ற குற்ற அமைப்புகள்
(2) Crime Syndicate - சங்கம் வைத்து நடத்தும் குற்றங்கள்
(3) Criminal Racket - காலாடித் தனமாக நடத்தும் குற்றங்கள்
(4) Political Graft - அரசியல் ஊழல்

## கொள்ளை அடிக்கின்ற அல்லது கொல்கின்ற குற்ற அமைப்புகள்

## Predatory Crime

இவ்வகை குற்றங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித சேவையும் கிடையாது. இது ஒரே பாதையில் செல்லும் வகையான குற்ற செயல். இந்த வகை குற்றம் புரிபவர்கள் பச்சாதாபம் அற்றவர்கள்.

குமரபருவம் உள்ளவர்களை இவர்கள் சுலபமாக பயன்படுத்துவார்கள். இந்த குற்ற வகையில் வருவது திருட்டு, கூட்டுக்கொள்ளை, அச்சுறுத்தி பணம், பொருள் பறித்தல், ஆள் கடத்தல் மற்றும் பிக்பாக்கெட் குற்றங்களாகும்.

## சங்கம் வைத்து நடத்தும் குற்றங்கள்
## Crimes Syndicate

இந்த குற்றம் நடத்தும் கூட்டத்தினர் கஷ்டமர்களின் விருப்பத்தோடு அவர்களுக்கும் பங்கு கொடுத்து செய்கின்றனர். இவர்கள் நடத்தும் மார்க்கட்டில் இவர்களுக்கு தனி இடம் உண்டு. இந்த வகையான குற்றங்களாவன சூதாட்டம், மதுபானவகைகளை சட்டத்திற்கு புறம்பாக விற்பது, விபச்சாரம் ஒரு சந்தை ஆக்குவது, போதை பொருட்களை விநியோகம் செய்வது இதில் அதிக லாபம் சம்பாதிக்கப்படுகிறது. இந்த தொழில் செய்யும் போது வற்புறுத்தல் பயமுறுத்தல் வன்முறை மற்றும் கொலையில் போய் முடிகிறது. இதில் அரசியல்வாதிகளின் பங்குகளும் உண்டு. ஏனெனில், அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையும் தேர்தல் காலங்களில் அவர்களுக்கு பணம் பொருள் முதலான உதவிகளையும் பெருகின்றனர்.

## காலாடித்தனமாக நடத்தும் குற்றங்கள்
## Criminal Racket

காலாடித்தனமாக செய்து அச்சுறுத்தி காயம் உண்டாக்குவதும் சொத்துகளை பறிப்பதும் ஆகும். இத்தகைய குற்றம் புரியும் கூட்டத்தினரை நம்பி இருப்பவர்கள் தொழிற்சாலை நடத்துபவர்களும் கூலி வேலை செய்யும் சங்கத்தினரும் ஆகும். இவர்கள் சில சமயங்களில் வன்முறையை செய்வார்கள் மற்றொரு வழியில் லேபர் சங்கங்கள் வைத்திருப்பார்கள். முதலாளிகளிடமிருந்து அதிக பணம் மற்றும் சம்பளம் பறிப்பவர்களும் உண்டு. முதலாளிகளும் சில சமயங்களில் பொய்யான பினாமி பெயர்களிலும் தொழில் நடத்தி அதிகபணம் சம்பாதிப்பது உண்டு வர்த்தக ஸ்தலங்களில் தான் இத்தகைய ராக்கெட் அதிகம்.

## அரசியல் ஊழல்
## Political Craft

தொழில் ரீதியாக, குற்றமே தொழிலாக கொண்டவர்கள் அரசியல்வாதிகளிடமும் பெரிய பணக்கார்களிடமும் தொடர்பு வைத்திருக்கின்றனர். அரசியலில் நல்ல நிலமையை அடையவும், தேர்தல்களில் வெற்றி பெறவும் அரசியல்வாதிகள் பல வகையான குற்ற செயல் புரிபவர்கள் தம் கையாட்களாக வைத்துள்ளனர். இப்படி குற்றவாளிகளை தம் கைவசம் வைத்துக்கொண்டு சட்ட விரோத செயல்களினால் அரசியல் நிலையை உயர்த்துவது தான் அரசியல் ஊழல் எனப்படும் ஓட்டுகளை விலைக்கு வாங்குவது தான் இவர்களின் பிரதான தொழில்

நினைவில் கொள்க - Note Below:-

S – 34 IPC – Common Intention (பொது நோக்கம்)

S – 149 IPC – Common object (பொது குறிக்கோள்)

S – 120 B IPC Conspiracy (கூட்டு சதி)

S 395 IPC Conjointly (கூட்டு கொள்ளையில் கலந்து செய்வது)

மேற்கொண்ட பிரிவுகளும், சொற்களும் இரண்டும், இரண்டு பேர்களுக்கு மேலும் குறிப்பிடும் சொற்களாகும். அமைப்பு ரீதியான குற்றங்களை புரிபவர்கள் தங்கள் செய்யும் குற்றப் பிரிவுகளோடு மேற்படி பிரிவுகளையும் அவசியம் சேர்க்கவேண்டும் எதில்? முதல் தாக்கல் அறிக்கையில் குற்றப்பத்திரிக்கையில்.

## CRIMINOLOGY (ROLE OF POLICE IN INTERNAL SECURITY) TERRORISM

Terrorism means a violent and threatening methods adopted by a group of persons with a common ideology to coerce the government to agree to their goals on political, social, communal and economic motives. The terrorist attach comes in the form of nuclear, biological or chemical agent as a weapon of mass destruction of people, properties and institutions international terrorists with political motively are considered to be patriots or heroes or freedom fighters within their own country or their political circle. Terrorism using fire arms, explosive, chemical or biological weapons is a major problem to the developing and developed countries.

Bombs are arsoning devices cause a majority of terrorist incidents. This is usually done in large shrubbery groupings, commercial garbage dumpsters, mail box, vehicles and other areas that could conceal a secondary device. The IED improvised explosive devices has become the common weapon of attach. The terrorist invariable carry fire arms including AK 47 with many really filled magazines.

Chemical weapons are also used by terrorists. Most civilized people would consider that the use of chemicals to harm or kill innocent persons in inhumaneam barbaric and cruel. Some of the chemical agents, thus used as weapon of offence, are NEUROTOXINS common material is pesticide – they can enter through any route and cause incapacitation and death.

Biological weapons mane infecting deadly disease or poison by a biological toxin. This is an easy method also. Biological toxins are chemical compounds poisonous to humans produced by plants, animals or microbes. Anthrax powder in the recent (i.e.) infected with bacteria, cholera virus – small box, etc.

Nuclear weapons – This bomb threat is unlikely to be carried out for a number of reasons, including extreme expenses and technology. Radio active materials are misused for this purpose. This involves storage facilities or transportation vehicles.

## DISASTER MANAGEMENT:

In any disaster, the speed and effectiveness and efficiency command are the required qualities of the security personnel. Terrorist activities are often directed towards the loss of human life. The initial found of response must be on the health and the medical consequence. Then immediately legal action including the apprehension or encounter and remedial / preventive measures at the other areas.

1. Integrated activities of fire, Police, security personnel, hospital, health, NGOs, revenue, Municipality, etc.

2. Exercise on response time.
3. Ensure sufficient medical supplies, personal protection equipment, decontamination equipment, evidence recovery equipment and stress debriefing to responders and hospitals for use during and after the incident.
4. Develop integrated international intelligence systems.

Terrorism is becoming a major problem in the country. Understanding the complex interdependency between all agencies is an essential part of the response equation.

TO DO ANYTHING LESS WOULD BE A DISSERVICE TO THE COMMUNITY – An Irish Republican Army terrorist once said, " I have to be LUCKY ONLY ONCE; you must be lucky EVER TIME".

Various example: Jammu & Kashmir, Gujarat, Bombay, Coimbatore, Delhi etc.

The emergence of POTA – Prevention of Terrorism Act.

**IN INDIA 23 ORGANISATIONS WERE DECLARED AS TERRORIST ORGANISATIONS U/S 18 OF THE SAID ACT.**

| Sl. No. | Names of organisations | Names of leader |
|---|---|---|
| 1. | Khalistan Commando Force (Punjab)<br>காலிஸ்தான் கமாண்டோ போர்ஸ் (பஞ்சாப்) | P.S. Panjwar Gur Bachan Singh<br>பி. .எஸ். பஞ்சவர் குர் பஜன் சிங் |
| 2. | International Sikh Youth Federation (U.K., Canada)<br>யூத் பெடரேஷன், யூ. கோ. குனடா) | Bhai Lakhbir Singh Rode, Satinderpal Singh Gill |
| 3. | Babbar Khalsa International (Punjab) | Sukhdev Singh Babbar, Talwinder Sing |
| 4. | Khalistan Zindabad Force (Punjab / J & K) | Ranjit Singh @ Neet |
| 5. | Laskhar-e-Toiba (Pakistan) | Hafiz Mohd. Sayeed |
| 6. | Al Umar Mujahideen (Sri Nagar)<br>Ilrkat-Ul-Jehad-e-Islami (Islamabad) | Mushtaw Ahamed Zargar @ Latram Md. Iliyas Kashmir |
| 7. | Harkat-Ul-Mujahideen (Islamabad) | Maulana Farook Kashmiri |
| | Ilarkat-Ul-Ansar (Islamabad) | Abu Minhar r/o DODA |
| 8. | Jaish-e-Mohamed (Ravalpindi) | Maulana Masood Asar |
| 9. | Jammu and Kashmir Islamic Front (Sri Nagar) | Bilal Ahamed Baig |
| 10. | Hizh-Ul-Mujahideen Muzhaffarbad (Pakistan) | Ghuiam Nabi Nousheri |
| 11. | United Liberation Front of Assam (Assam) | Ghuiam Nabi Nousheri |

| | | |
|---|---|---|
| 12. | National Democratic Front of Boroland (Assam) | Ranjan Doimary |
| 13. | Peoples Liberation Army (Bangladesh) | Irengbam Chaoren |
| 14. | United National Liberation Front (Mynarmar) | R.K. Meghan |
| 15. | People's Revolutionary Party of Kangleipak (Myanmar) | Raliba S.S. |
| 16. | Kangtelpak Communist Party (Imphal) | K.K. Mangang |
| 17. | Kanglel Yawol Kanna Lup (Imphal) | N. Oken |
| 18. | Manipur People's Liberation Front (Manipur) | No Leader |
| 19. | All Tripura Tiger Force (Tripura) | Ranjit Debbarana |
| 20. | National Liberation Front of TWIPRA (Tripura) | Biswa Mohan Debbarma |
| 21. | Liberation Tigers of Tamil Elam (Sri Lanka) | Velupillai Prabakaran |
| 22. | Students Islamic Movement of India (New Delhi) | Dr. Shabid Badr Faiabi |
| 23. | Deendar Anjuma (Pakistan) | Mohd. Jafar Sadiq Asar |

## பயங்கரவாதம்

பயங்கரவாதம் என்பது ஒரு கூட்டத்தின் தங்களுடைய இலட்சியத்தை அல்லது குறிக்கோளை அடையசெய்யும், பயத்தை உண்டு பண்ணக்கூடிய வன்முறை செயல்களாகும். இதன் பின்னனியில் அரசியல் சமுதாய, சமூக இன மற்றும் பொருளாதார காரணங்கள் இருக்கும். பயங்கரவாத தாக்குதல் அனு, இரசாயண மற்றும் உயிரினவகை ஆயுதங்களைக் கொண்டு பலநாட்கள் கொள்ளையடித்தல், அழித்தல் சொத்துக்களை நாசம் செய்தல் போன்ற காரியங்களை திட்டமிட்டு பயமின்றி செய்வர். அவர்கள் வெடிகுண்டு, துப்பாக்கிகளை சர்வசாதரணமாக பயிற்சி கொண்டு பயன்படுத்துவர். அவர்கள் பயன்படுத்தும் வெடிகுண்டுகளை ஆங்கிலத்தில் கூறப்படும்போது அவர்கள் உயரக துப்பாக்கிகளை பயன்படுத்துவர்.

## பயங்கரவாத தாக்குதலால் பேரழிவு சமாளித்தல்

இத்தகைய காலத்தில் போலிசாரின் வேகமான பொருத்தமான, திறமையான செயல்பாடுகள் அவசியம் தேவை. ஏனெனில் பயங்கரவாத செயல்களால் அப்பாவி மக்களை நிறையபேர்களும் பிரமுகர்களும் பலி ஆவார்கள். மருத்துவ உதவி, பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து மக்களை வெளியேற்றுவது போன்ற வேலைகளை உடனடியாக செய்யவேண்டும். கீழ்காணும் நடவடிக்கைளை பயங்கரவாத தாக்குதலை முன்னிட்டு வேகமாக எடுக்கவேண்டும்.

1) போலிஸ், தீ அணைப்புத்துறை, மருத்துவதுறை, முனிசிபாலிடி, ரெவின்யூ மற்றும் சம்பந்தப்பட்ட அரசாங்க துறைகளும் தன்னார்வ நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்படுதல் தேவை.

2) எப்படி எவ்வளவு விரைவில் செய்யவேண்டும் என்பதனை பயிற்சி செய்யவேண்டும்.

3) கீழ்காணும் பொருட்கள் தயார் நிலையில் இருப்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

- மருத்துவ பொருட்கள் வழங்குதல்.
- உயிர்காக்கும் அணிகள் பயன்படுத்துவது
- தொற்றுநோய் தடுப்பு கருவிகள் தயார் நிலையில் வைத்து நோய்தடுப்பது
- சாட்சியம் காணல்
- மருத்துவமனைகளை தயார் நிலையில் வைத்திருத்தல்.

4) எல்லாவிதமான சங்கதிகளையும் தகவல்களையும் திரட்டுவது.

## வகுப்பு மற்றும் மதக்கலவரங்கள்
## COMMUNAL AND POLITICAL AGITATIONS
### (COMMUNAL AND RELIGIOUS CLASHES)

நம் பாரத நாட்டில் பல மொழி, பல மதங்கள், பல இனத்தைச் சார்ந்த மக்கள் நாடு முழுவதும் வசித்து வருகிறார்கள். இதுவே பாரத நாட்டின் கலாச்சாரத்தின் தனிச் சிறப்பு ஆகும். இந்தியா சுதந்திரம் அடைந்து 1947-ம் ஆண்டில் பாகிஸ்தான் பிரிந்தபோது இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையே இனக் கலவரம் ஏற்பட்டு அது இன்று வரையும் நம் நாட்டினைப் பிடித்த நீங்காத நோயாக இருந்து வருகிறது.

மதம், சாதி, இனம், மொழி, பிறந்த இடம், வசிக்கும் இடம் ஆகியவற்றில் ஏதாவது வேறுபட்ட இருதரப்பு மக்கள் ஒருவருக்கொருவர் ஏதாவது ஒன்றில் ஏற்பட்ட வெறுப்பு காரணமாக மோதி வன்முறையில் இறங்கி கலவரம் செய்வதை இனக்கலவரம் என்று சொல்லலாம்.

### இனக் கலவரத்தால் ஏற்படும் பாதிப்புகள்

இனக்கலவரம் ஏற்படுவதால் கீழ்க்கண்ட பாதிப்புகள் ஏற்படுகிறது.

1) நாட்டின் பொருள் உற்பத்தி பாதிக்கும்.

2) ஏராளமான உயிர்ச் சேதங்கள், பொருட் சேதங்கள் ஏற்படும், பெண்கள் குழந்தைகள், நோயாளிகள், வயோதிகர்கள், உடல் ஊனமுற்றோர்கள் ஆகியோர் கடுமையான பாதிப்புக்கு உள்ளாவார்கள்.

3) மக்களிடம் சகோதர மனப்பான்மை மாறி, சகிப்புத் தன்மை குறைந்து சிறுகாரணங்களுக்காக கூட கலகம் செய்யும் மனப்பான்மை வளரும்.

4) ஒரு நாட்டின் மீதுள்ள நன்மதிப்பும், சகோதரத் தன்மையும் பாதிக்கப்படும்.

5) முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், வாழும் வெளி நாட்டுடன் நமது நாடு ஏற்படுத்தி இருக்கும் நல்லுறவுகளை பாதிக்கும்.

6) சமூக விரோதிகளின் சட்ட விரோத செயல்களுக்கு இடம் கொடுக்கும்.

## இனக் கலவரம் ஏற்பட முக்கிய காரணங்கள்

1) செய்தித் தாள்கள், துண்டு பிரசுரங்கள், கார்ட்டுன், வரைபடம் பேச்சுக்கள், உரையாடல்கள் ஆகியவற்றின் மூலம் ஒரு மதம் அல்லது ஜாதி அல்லது இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற இனம், ஜாதி மத மரபு பழக்கங்கள், மதச் சின்னங்கள் போன்றவற்றைப் பற்றி இழிவாக கருத்துக்கள் வெளியிடுதல்.

2) முஸ்லிம்கள் மசூதி முன்பு கொட்டம் அடித்தல் அல்லது இசை முழுக்கம் செய்தல்.

3) ஒரு மதம் அல்லது ஜாதியைச் சேர்ந்தவர்கள் மற்றொரு ஜாதியைச் சேர்ந்தவர்களின் வழிப்பாட்டுத் தலங்களுக்குச் சென்று அவர்கள் மனம் புண்படும்படி ஏதாவது ஒரு செய்கையை செய்யும் போது.

4) ஒரு மதத்தைச் சேர்ந்த நபர்கள் மற்றொரு மதத்தைச் சேர்ந்தவர்களை கட்டாயப்படுத்தியோ அல்லது ஆசைக் காட்டியோ மதமாற்றம் செய்யும்போது.

5) ஒரு மதம் அல்லது ஜாதியை சேர்ந்த பெண் அல்லது சிறுமியை மற்றொரு மதத்தைச்சேர்ந்த நபர் கேலி செய்தாலோ அல்லது கடத்திச் சென்றாலோ அல்லது கற்பழித்தாலோ.

6) வெவ்வேறு மதம் அல்லது ஜாதியைச் சேர்ந்த வியபாரிகள் கள்ளக்கடத்தல் காரர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் அலல்து விற்பவர்கள் குண்டர்கள் ஆகியோர் தொழிலில் உட்போட்டியின் காரணமாக பிரிவுகளாக சேர்ந்து மோதிக்கொள்ளும்போது.

7) ஊர்வலங்களில் செல்பவர்கள், ஒரு குறிப்பிட்ட ஜாதி, இனம் ஆகியவற்றை தாக்கி குரல் கொடுத்துச் செல்லும்போது.

8) ஒரு மதம், ஜாதி, இனத்தைச் சேர்ந்தவர்கள் ஊர்வலம் செல்லும்போது மற்ற மதம், ஜாதி, இனத்தைச் சேர்ந்தவர்களால் தடுக்கப்படும்போது.

9) சமூக விரோதிகள் இனக்கலவரம் ஏற்படுத்துவதற்குத் தகுந்தவாறு வதந்தியைப் பரப்பி இருதரப்பினா் மதம் அல்லது ஜாதி அல்லது இனம் ஆகியவற்றை சேர்ந்தவர்களை கொதிப்படையச் செய்து வன்முறையைத் தூண்டி விடுதல்.

10) சமூக உரிமைக்கு தீங்கு விளைவிக்ககூடிய செய்கையை ஒரு மதம் அல்லது ஜாதியைச் சேர்ந்தவர்கள் இன்னொரு மதம் அல்லது ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக செயல்படுத்தும்போதும் இனக் கலவரம் ஏற்படுகிறது.

## இனக் கலவரம் ஏற்படாமல் தடுக்கும் முறைகள்
## (காவல் துறை செய்ய வேண்டியது)

1. இனக் கலவரம் ஏற்படுவதற்கு முன்பே தகவல்களை சேகரித்து முன் கூட்டியே தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2. வதந்திகளை பரப்பும் விரோதிகள் மீது நெருக்கமான கண்காணிப்பு வைக்க வேண்டும்.

3. தேவைப்பட்டால் சமூக விரோதிகள் யார், யார் என அடையாளம் கண்டு தேர்ந்தெடுத்து அவர்கள் மீது தடுப்பு காவல் சட்டங்களை பயன்படுத்தி முன்கூட்டியே தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. கைது செய்யப்பட்ட இருதரப்பினர்கள் மீதும் அவர்களுக்கு உதவி செய்பவர்கள் மீதும் பிரிவு 107 கு.வி.மு சட்டப்படி நிர்வாகத்துறை நடுவர் முன்பு ஆஜர் செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

5. உண்மையான நிலையை மக்களிடம் வானொலி, தொலைக்காட்சி மூலம் பரப்பி வதந்திகளை மக்கள் நம்பவிடாமல் செய்யவேண்டும்.

6. ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு 30(2) காவல் சட்டம் மற்றும் 144 கு.வி.மு சட்டம் ஆகியவற்றை தேவையான இடங்களில் அமல்படுத்த வேண்டும்.

7. பெரும்பாலும் நம் நாட்டு மக்கட் தொகையில் பெரும் பகுதியினர் படிப்பறிவு இல்லாதவல்களாகவும், அறியாமையிலும், மூடநம்பிக்கையிலும், நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால், சமூக அமைப்புகள் மூலம் அறியாமையை நீக்கி சமூதாயத்திற்கு ஏற்ற கல்வி வளர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

8. இனக்கலவரம் ஏற்படக்கூடும் என சந்தேகப்படும் பகுதிகளில் காவல் துறையைச் சேர்ந்தவர்களை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தி தகவல் தொடர்பு சாதனங்களை நிறுவவேண்டும்.

9. தனி சுற்றுக் காவல் படை (Special Patrol Party) அமைத்து இனக் கலவரம் ஏற்படும் இடங்களில் பாதுகாப்பு பணிகளைச் செய்யவேண்டும்.

10. வருவாய்த் துறை அலுவலர்கள் (மாவட்ட ஆட்சியர்) உயர் துறை அலுவலர்கள் ஆகியவர்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

11. இருதரப்பினரிடையே மனக் கசப்பு இருந்தால் நிர்வாகத்துறை நடுவர்களாகிய வருவாய்துறை அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் இணைந்து அந்த இடத்தில் உள்ள இருதரப்பினர்களின் முக்கிய நபர்களையும் கொண்டு சமாதானக் கூட்டம் நடத்தி அவர்களிடையே உள்ள மன வேறுபாடுகளை அகற்றி ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்.

12. தவறு செய்தவர்கள் மீது பாரபட்சமற்ற, நியாயமான கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## இனக் கலவரம் நடப்பதாக தகவல் கிடைத்தவுடன் காவல்துறையினர் செய்யவேண்டியவை

1. இனக்கலவரம் நடந்து கொண்டிருப்பதாக தகவல் கிடைத்தால் அந்த இடத்தில் காவல் துறையினர் விரைந்து செல்லவேண்டும். போகும்போது அருகில் உள்ள நிர்வாகத்துறை

நடுவரை உடன் அழைத்துச் செல்லவேண்டும். தேவையான ஆயுதங்களை எடுத்துச்செல்ல வேண்டும். உயர் அலுவலர்களுக்குத் தகவல் கொடுக்கவேண்டும். போதுமான காவலர்களுடன் செல்லவேண்டும்.

2. சம்பவம் நடந்த இடத்திற்கு சென்ற உடன் கலவரம் செய்துகொண்டு இருக்கும் கூட்டத்தை எச்சரிக்கைச் செய்தல், கண்ணீர் புகைக்குண்டு வீசுதல், தடியடி நடத்துதல், துப்பாக்கிச் சூடு ஆகிய நடைமுறைகளில் எதை பின் பற்றி செய்யவேண்டும் என்பதை சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு தேவையான அளவுக்கு பயன்படுத்த வேண்டும்.

3. கலவரத்தில் ஈடுபட்ட நபர்களை உடனடியாக கைது செய்து அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்ற வேண்டும்.

4. தீயணைக்கும் படைக்கு தகவல் தெரிவித்து சம்பவ இடத்திற்கு உடனடியாக வரவழைத்து அதனுடைய சேவையை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

5. கலவரத்தில் காயமுற்ற நபர்களுக்கு முதல் உதவி சிகிச்சை அந்த இடத்திலேயே கொடுத்து அவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பவேண்டும்.

6. சம்பவ இடத்தில் தீ மற்றும் வெடிப்பொருள்களால் அழிவு ஏற்பட்டுக் கொண்டிருந்தால் அது மேலும் பரவாமல் தடுத்து நிறுத்த வேண்டும்.

7. கலவரம் நடக்கும் இடத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள சந்தேகப்படும் படியான குடியிருப்புகளில் சோதனை செய்து ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் இருந்தால் கைப்பற்ற வேண்டும். சம்மந்தப்பட்ட நபர்களை கைது செய்யவேண்டும்.

8. கலவரத்தில் இறந்த உடல்கள் மீது விரைவாக பிரேத விசாரணை செய்து பிரேத பரிசோதனைக்கு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பவேண்டும்.

9. கலவரத்தில் ஈடுபட்டவர்களின் மீதுள்ள வழக்கை திறம்பட புலன் விசாரணை செய்து சாட்சியங்கள் சேகரித்து சம்மந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுத்தர வேண்டும்.

10. கலவரம் நடந்த இடத்தில் உள்ள அனைத்து மக்களையும் ஒன்று கூட்டி நடுவர்களாகிய வருவாய்துறை அலுவலர்களும், காவல்துறை அலுவலர்களும் இணைந்து அந்த மக்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தி மேலும் கலவரம் நடவாமல் கண்காணிக்க வேண்டும்.

11. கலவரம் நடந்த கிராமங்களிலும், சுற்றுப்புற கிராமங்களிலும் காவலர்களை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

12. தகவல் தொடர்பு சாதனங்களை, நிறுவி அவ்வப்போது உள்ள நிலவரங்களை சம்மந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

13. மக்கள் அச்சமில்லாமல் அவர்களுடைய தொழில்களை அமைதியாக செய்வதற்கு ஏற்ற நிலைமையை உருவாக்கித் தருவது காவல் துறையினரின் கடமையாகும்.

14. பாதிக்கப்பட்ட கிராமங்களில் நிவாரணப் பணிகளை முடக்கிவிட வேண்டும்.

15. கலவரத்தை அடக்கும் முயற்சிகள் பயனற்று போகும்போது அவசியப்பட்டால் ஊரடங்கு உத்தரவை அமல்படுத்தலாம்.

16. கலவரம் நடந்த பகுதிகளில் பொதுக் கூட்டங்கள் ஊர்வலங்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்த 30(2) காவல் சட்டம் மற்றும் கு.வி.மு. சட்டம் ஆகியவற்றை அமல்படுத்த வேண்டும்.

தெரிந்து கொள்க

## TAMIL NADU EXTREMISTS

(தமிழ்நாட்டில் தீவிரவாத அமைப்புகள்)

| | | |
|---|---|---|
| 1. | TMMK | Tamil Nadu Muslim Munnetrakkazhagam |
| 2. | MNP | Manitha Neethi Peravi |
| 3. | PLA | Peoples Liberation Army |
| 4. | TVP | Tamizhar Viduthalai Padai |
| 5. | CPI (ML) | Community Party of India (Marxist Leninist) |
| 6. | AICCTU | All India Central Council of Trade Union |
| 7. | AIALA | All India Agricultural Labourer's Association |
| 8. | TNMLP | Tamil Nadu Marxist Leninist Party |
| 9. | RYF | Revolutionary Youth Front |
| 10. | CPI (Mooist) | Communist party of India (Mooist) |
| 11. | PALA | People's Arts and Literary Association |
| 12. | ALF | Agricultural Liberation Front |
| 13. | RSYF | Revolutionary Students and Youth Front |
| 14. | TNSOC | Tamil Nadu State Organizing Committee |
| 15. | ALPWA | All India Progressive Women Association |
| 16. | TNLA | Tamil Nadu Liberation Army |
| 17. | CPI ML (Red flag) | Communist Party of India Marxist Leninist Red Flag |
| 18. | CPI ML (PW) | Communist Party of India Marxist Leninist peoples |
| 19. | TVNC | |

* * * *

# CONTENTS

## பொருளடக்கம்


| வ.எண் | அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | குற்றவியல் (Criminology) | ... | |
| 2. | குற்றவியலின் தத்துவமும் வாதங்களும் | ... | |
| 3. | குற்றம் புரிவதற்கான காரணங்கள்<br>Causes of Crime | ... | |
| 4. | Theories of Penology | ... | |
| 5. | Juvenile Delinquency | ... | |
| 6. | Habitual Offenders: | ... | |
| 7. | Violence and Police present trends in law and order | ... | |
| 8. | White Collar Crime | ... | |
| 9. | Organized Crimes<br>அமைப்பு ரீதியான குற்றங்கள் | ... | |
| 10. | Criminology (Role of Police in internal security) terrorism | ... | |
| 11. | Disaster Management | ... | |
| 12. | பயங்கரவாதம் | ... | |
| 13. | Communal and Political Agitations<br>(Communal and Religious Clashes)<br>வகுப்பு மற்றும் மதக்கலவரங்கள | ... | |